RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 26 மே 2023 இதழ்:- 05

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# கனடா - இலங்கை ராஜீய மோதல்கள் மோசமான பாதையை நோக்கிச் செல்கிறதா?



கனடா நாடாளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படு கொலை தினம் கடைப்பிடிப்பு (மே 18) முன் மொழிவு தொடர்பான அறிவிப்பை கனடா பிரதமர் ஜெஸ்டீன் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனது கடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்துள்ளது. இது தற்போது அந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜீய அளவிலான மோதலாக உருப் பெற்றுள்ளது. (19ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா? ஜனநாயகப் போராளிகள் கட்சியிடம் துருவித்துருவி விசாரணை!



விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடுகின்றதா என கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தன்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர மேலும் தெரிவிக்கையில், கடந்த எட்டு ஆண்டுகளாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது (8ம் பக்கம் பார்க்க)

# நினைவேந்தலைத் தடுக்க எந்தச் சட்டத்திலும் இடமில்லை - ஜனாதிபதி

## கனடா பிரதமரின் கருத்து குறித்து தூதுவரை அழைத்து ஸ்ரீலங்கா அரசு எதிர்ப்பை வெளிப்படுத்தியது!



முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த கருத்துக்களிற்கு இலங்கைக்கான கனடா தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சு கடும் ஆட்சேபணையை(5ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances,
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Markham & Eglinton
Scarborough $525,000
Bedrooms: 3 Washrooms: 2
Big, Bright And Beautiful Condo
Dundas/Hurontario St
Mississauga $639,000
Bedrooms: 3 Washrooms: 2
Very Spacious Bright Condo
King St. S & Queen St. S
Hamilton $699,900
Bedrooms: 2 Washrooms: 2
Platinum Condos at DT Hamilton
Bridge St W & Woolwich St
Kitchener $799,000
Bedrooms: 3 Washrooms: 3
Freehold Townhouse End Unit
Yonge St / Queens Quay
Toronto $978,000
Bedrooms: 2 Washrooms: 2
Modern Living By The Lake!
Queens Quay & Lower Sherbourne
Toronto $849,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit
Chinguacousy & William Pkwy
Brampton $1,075,900
Bedrooms: 4 Washrooms: 3
End-Unit Townhouse, Corner Lot!
River Street & Highway 12
Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement
Meadowvale / 401
Scarborough $1,899,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.
Bur Oaks/Markham Rd
Markham $550,000
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building
Finch & Pharmacy
Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Living & Dining
Grey Highlands
Markdale $7,200,000
Dollarama And Tim Hortons
Newly Built Tim Hortons Building
Birchmount/Lawrence
Scarborough $639,000
Bedrooms: 2 Washrooms: 2
Upgraded And Maintained Unit
Mccowan & Ellesmere
FOR LEASE
Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout
Dixie Rd & Kingston Rd
FOR LEASE
Pickering $1,850
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated
Victoria Park / Innismore
FOR LEASE
Scarborough $1,300
Bedrooms: 1 Washrooms: 1
Great Location! Newly Renovated
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 3



EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# நினைவேந்தலைத் தடுக்க எந்தச் சட்டத்திலும் இடமில்லை! பொறளையில் நினைவேந்தலைக் குழப்ப முயன்றதைக் கண்டிக்கின்றேன்!

கொழும்பு, பொரளையில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை குழப்ப முயன்றதைக் கண்டிக்கின்றேன்

நினைவேந்தல் நிகழ்வுகளை எந்த இடத்திலும் நடத்த முடியும். அதற்கு வடக்கு, கிழக்கு, தெற்கு என்று வேறுபாடு கிடையாது. போரில் இறந்தவர்களின் உறவுகள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெங்கெல்லாம் நினைவேந்த முடியும்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வை ஒரு குழுவினர் இனவாத நோக்கத்தோடு தடுத்து நிறுத்த முற்பட்டதைக் கண்டிக்கின்றேன்.

பயங்கரவாதிகளை எவரும் எந்த இடத்திலும்நினைவேந்த முடியாது. ஆனால் போரில் இறந்த உறவுகளை அவர்களின் சொந்தங்கள் சுதந்திரமாக நினைவேந்த முடியும். அதைத் தடுத்து நிறுத்த நாட்டில் எந்தச் சட்டத்திலும் இடமில்லை என்றார்.





நாட்டில் அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே முப்படையினர் போராடினார்கள். விடுதலை புலிகள் நாட்டைப் பிரிக்க போராடினார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் சியாம் நிகாய மத வழிபாட்டுக்கு தமிழ் அரசியல்வாதிகள் காரணமின்றி தடையேற்படுத்துவார்களாயின் பாரிய அழிவு ஏற்படும் என்று நான் தெரிவித்த கருத்தின் நோக்கத்தை அறியாமல் ரவூ ப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்த கருத்துக்களையிட்டு கவலையடைகிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பொது நினைவுத்தூபி கோழைத்தனம்

முப்படையினரையும், விடுதலை புலிகளையும் சமநிலையில் வைத்துப் பார்க்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் வெட்கக் கேடானது என்றும் அரசாங்கத்தின் இந்த செயலுக்கு வெட்கமடைகிறேன் என்றும் தெரிவித்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர எம்.பி, நினைவு தூபி அமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் 23 மே 2023 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பந்தயம், சூதாட்ட விதிப்பனவு திருத்தச் சட்ட மூல இரண்டாம் வாசிப்பு மீதான மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் 'நினைவுத் தூபி' ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது. இதனை நல்லிணக்கம் என்று கூறக் கூடாது. இதற்குப் பெயர் கோழைத்தனம்.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த முப்படையினரையும், பயங்கரவாதிகளான விடுதலை புலிகளையும் எவ்வாறு சம நிலையில் பார்க்க முடியும்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை சிங்கள அரசியல்வாதிகளே செய்தனர்

உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதல்களை பலம் பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

அல்சுஹிரியா அரபுக் கல்லூரியில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வழக்கில் சாட்சிகள் என கருதப்படக்கூடியவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்த டுவிட்டர் பதிவிற்கு அளித்துள்ள பதிலில் முன்னாள் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இது முஸ்லீம்களிற்கு எதிரான நடவடிக்கை இந்த நடவடிக்கை 2013 இல் அவர்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை போன்றது அது மீண்டும் நிகழ்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலை பலம் பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர்,என அவர் தெரிவித்துள்ளார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விவகாரம், வைத்தியர் ஷாபி விவகாரம் போன்ற பல விடயங்கள் முஸ்லீம்களை ஆபத்தானவர்களாக சித்தரிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டன எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

முகாமையாளர் தேவை

மிசிசாகாவில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் முழுநேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணி புரிய இந்து சைவ நெறிகள் பற்றிய ஈடுபாடுடையவராகவும் கணனி சம்பந்தமான பொது அறிவுடையவருமான ஒருவர் உடனடியாகத் தேவை. தகமைக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு Hmmdhurga@gmail.com

தொலைபேசி 905 612 1856

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தீர்க்கமான முடிவெடுத்து விட்டு பேச்சுக்கு வாருங்கள்! காலத்தை இழுத்தடிக்க பேச வேண்டாம் - சம்பந்தர் காட்டம்!



தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை காண்பது குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுத்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாம் பேச்சுக்களை முன்னெடுத்தோம். இதன்போது, நில ஆக்கிரமிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விடயங்கள், படுகொலை செய்யப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள், அரசியல் கைதிகள் பற்றிய விடயங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் படைகளின் கபளீகரம் உள்ளிட்ட எமது மக்கள் முகங்கொடுத்து வருகின்ற அனைத்துப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பேச்சுக்களை முன்னெடுத்தோம்.

இந்த விடயங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர். இந்நிலையில், இறுதியாக நடைபெற்ற அதிகாரப்பகிர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தையின்போது எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

எம்மை பொறுத்தவரையில், எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்கின்ற வகையிலான நிரந்தரமான, நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும். இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறப்பட வேண்டும். இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் ஜனாதியிடமிருந்து எவ்விதமான உறுதியான பதில்களும் வழங்கப்படவில்லை.

குறிப்பாக தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நியாயமான அடிப்படையில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் ஜனாதிபதி முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து முடிவொன்றை எடுத்துவிட்டு எம்முடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

முடிவுகள் எடுக்கப்படாது தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுப்பதானது காலத்தினை வீணடிக்கும் செயற்பாடாகவே இருக்கும். அவ்விதமான நிலைமைகள் தொடர்ந்தால், நாம் உரிய தீர்மானத்தினை எடுப்போம். அதற்காக, அரசாங்கம் முன்னெடுக்கின்ற பேச்சுக்களில் பங்கேற்காமல் விடப்போவதில்லை. நாங்களாக பேச்சுக்களை குழப்பியவர்களாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. அதேநேரம், நியாயமான தீர்வு முன்வைக்கப்படாவிட்டால், நாம் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றார்.

## விக்னேஸ்வரக்கு அரசமைப்பு தெரியவில்லை!

நீதியரசராக இருந்து ஓய்வு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இன்றுவரை அரசமைப்பு பற்றி தெரியவில்லை என வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது சி.வி.விக்னேஸ்வரனால் முன் வைக்கப்பட்ட ஆவணம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசமைப்பின் 154 எல் பிரிவில் இடைக் கால நிர்வாக சபை தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபை நிர்வாகத்தை அரசமைப்புக்கு இயைவாக நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கருதினால் மாத்திரமே அவ்வாறானதொரு இடைக்கால நிர்வாக சபைக்கான அனுமதியை நாடாளுமன்றில் பெற்று நடைமுறைப்படுத்தலாம். போர்க்காலங்களில் கூட அவ்வாறானதொரு ஏற்பாடு நடைமுறையில் இருக்கவில்லை. இப்போது மாகாண நிர்வாகம் அரசமைப்புக்கு ஒத்திசைவாக நடக்கின்றது. அப்படியிருக்கையில் இடைக்கால நிர்வாக சபையை எப்படி அமைக்கலாம்? நீதியரசராக இருந்தவர் விக்னேஸ்வரன். அவருக்குச் சட்டம் தெரியும் என்று தான் முதலமைச்சராக்கினார்கள்.

ஆனால், முதலமைச்சராகிய சில மாதங்களிலேயே அப்போதைய பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸால், முதலமைச்சரின் சுற்றறிக்கைக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. பின்னர் அந்தச் சுற்றறிக்கையை மீளப் பெற்றார் விக்னேஸ்வரன். அவர் அரசமைப்புத் தெரியாமல் முதலமைச்சராகப் பணியாற்றினார்.

அந்தப் பதவியிலிருந்து விலகிய பின்னரும் அரசமைப்புத் தெரியாமல் இருக்கின்றார். முதலில் அரசமைப்பைப் படித்து தெளிவு பெற்ற பின்னர் அவர் செயற்பட்டால் நல்லது என்றார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

01 யூன் 2023 வியாழக்கிழமை - பிரதோஷ விரதம்

02 யூன் 2023 வெள்ளிக்கிழமை

வைகாசி விசாகம் - விசாகப் பொங்கல்

உபயம்:- திருநாவுக்கரசு குடும்பம்

இளையபெருமாள் குடும்பம்

மணிமாலை விஷ்ணுசுந்தரம் குடும்பம்

03 யூன் 2023 சனிக்கிழமை - பௌர்ணமி விரதம்

உபயம்:- திருஞானப்பிள்ளை நித்தியராணி குடும்பம்

வைகாசி விஷாகம் அன்று கனடா முத்துமாரி அம்மனுக்கு பொங்கல் வைக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 5



# முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை கனடா பிரதமரின் கருத்து குறித்து தூதுவரை அழைத்து ஸ்ரீலங்கா அரசு எதிர்பை வெளிப்படுத்தியது!





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த கருத்துக்களிற்கு இலங்கைக்கான கனடா தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சு கடும் ஆட்சேபணையை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான கனடாதூதுவர் எரிக்வோல்சினை வெளிவிவகார அமைச்சிற்கு அழைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. தூதுவரை அழைத்து எங்களின் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நாங்கள் 14 வருடங்களிற்கு பின்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைவுகூறுகின்றோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையில் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன பலர் காணாமல் போனார்கள் காயமடைந்தார்கள் இடம்பெயர்ந்தார்கள் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் பல சமூகங்களில் நான் சந்தித்த பலர் தமிழ் கனடா பிரஜைகளின் கதைகள் மனித உரிமைகள் சமாதானம் ஜனநாயகம் போன்றவற்றை இலகுவாக கருதமுடியாது என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே கடந்த வருடம் மே18ம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவுதினமாக நாங்கள் அங்கீகரித்தோம் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மோதலால் கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களிறகாக குரல் கொடுப்பதை கனடா நிறுத்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த அறிக்கையை கண்டித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளிற்கு உதவியாக அமையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# அலிசப்ரியின் கண்டனத்திற்கு சுமந்திரன் பதிலடி!



பொறுப்புக்கூறல் விவகாரத்தை பொறுத்தமட்டில் இதுவரையில் இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இது தொடர்பில் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கை நடுநிலையுடன் இருக்க வேண்டுமானால், அது சர்வதேச பொறிமுறையாக அமைய வேண்டியது அவசியம்.'

இவ்வாறு, தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தமிழினப் படுகொலை தொடர்பில் வெளியிட்ட கருத்தை கடுமையாக கண்டித்து நிராகரிப்பதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அதாவது, எவ்வித ஆதாரங்களுமின்றி முன்வைக்கப்படும் 'இனப்படுகொலை' தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கையர்களின் இன நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட கடந்த 14 வருடங்களில் அரசாங்கம் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. காலந்தாழ்த்தி விட்டு, குறித்த விடயத்தை ஏனைய சர்வதேச நாடுகள் வலியுறுத்திக் கூறியவுடன் கோபப்படுவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்பட்ட நாடுகளில் கனடாவும் ஒன்று. கனடா மட்டுமல்ல ஏனைய சர்வதேச நாடுகளும் இவ்விடயத்தை வலியுறுத்தி வருகின்றன.

இது தொடர்பில் எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்தில் சர்வதேச சமூகம் நிச்சயமாக அழுத்தங்களை பிரயோகிக்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம் பெற்றது என்ற உண்மையை கனடா ஏற்றுக் கொண்டமையை வரவேற்பதாக தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், இலங்கையில் இடம் பெற்ற இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் என்பது கடந்த 12 வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே முடங்கிப்போயிருப்பதாக சுட்டிக் காட்டினார்.

எனவே, இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ அல்லது சர்வதேச நீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க கனடா முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அது மாத்திரமன்றி, இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்று முடிந்த விடயங்கள் தொடர்பில் கனடா கவலையை வெளிப்படுத்தியுள்ளமை ஆறுதலளிக்கின்ற போதிலும், தற்போது நாட்டில் இடம்பெற்றுவரும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராக கனடா முன்நின்று செயற்படவேண்டும் என்றும் கஜேந்திரன் எம்.பி வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# வரையறைகளற்றது இராஜதந்திரம்?

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட கடந்த சில தினங்களில் இரண்டு முக்கிய சந்திப்புகளை மேற்கொண்டிருக்கின்றார்.

ஒன்று, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவாலை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன் போது, அதானி குழுமத்தின் முதலீடுகள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானதென்று குறிப்பிட்டிருப்பதுடன் நிலுவையில் இருக்கும் சில திட்டங்களுக்கான உடன்பாடுகள் விரைவில் கைச்சாத்திடப்படுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அடுத்ததாக, உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யாவை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது, அயோத்திக்கும் இலங்கைக்குமான ஆழமான தொடர்புகள் குறித்து கலந்துரையாடியதுடன் இராமாயாண காலத்துக்குரிய இடங்களை இரு நாடுகளிலும் மேம்படுத்துவது தொடர்பிலும் உத்தரபிரதேசத்திலிருந்து அதிகளவான உல்லாச பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பிலும் மொறகொட பேசியிருக்கின்றார்.

இதன்போது, இராமரின் சகோதரர் இலட்சுமணனை குணப்படுத்துவதற்காக இலங்கைக்கு சஞ்சீவினி மூலிகையை அனுமர் கொண்டு வந்தாரென இராமாயாண கதை கூறுகின்றது. இதனடிப்படையில், சஞ்சீவினி மூலிகையை உத்தரபிரதேசத்தில்அதிகளவில் பயிரிட வேண்டுமென்று முதலமைச்சர் யோகிஆதித்யாவிடம் கோரியிருக்கின்றார். இதற்கு அவர் உடன்பட்டிருக்கிறாரென இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

மொறகொட உத்தரபிரதேச முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்ற சமவேளையில், சீனாவின் யுனான் மாகாணத்தின் ஆளுநர் இலங்கைக்கு பயணம் செய்திருக்கின்றார். சீனாவின் யுனான் மாநிலத்துக்கும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் உடன்பாடொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த உடன்பாட்டின் மூலம் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு திட்டங்களை சீனா மேற்கொள்ளவுள்ளது. யுனான் மாகாணத்துக்கும் இலங்கைக்கும் குறிப்பாக, பொலநறுவை இராசதானிக்கும் இடையிலான வரலாற்று தொடர்புகளின் அடிப்படையிலேயே யுனான் மாகாணத்துடன் உடன்பாடுகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

அதே போன்றதொரு திட்டத்தை சமவேளையில் மொறகொட இந்தியாவிடம் முன்வைக்கின்றார். இராமாயண காலத்தின் வரலாற்று தொடர்பின் அடிப்படையில் உத்தரபிரதேசமும் இலங்கையும் நெருங்கிச் செயல்பட வேண்டுமென்று கூறுகின்றார். தங்களின் இராஜதந்திரம் எல்லைகளற்றது என்பதை அவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்.

மறுபுறம் தமிழர் தரப்புகளோ பழைய கதைகளை கூறி மேலும் எதிரிகளை உருவாக்கும் பணிகளையே திறம்பட முன்னெடுத்து வருகின்றது. ஒரு குழுவினர் முக்கியமாக அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சியினர் இந்திய எதிர்ப்பு கதைகளை தமிழ் மக்கள் மத்தியில் காவித்திரிகின்றனர். இன்னொரு குழுவினரோ, சர்வதேசத்தை நோக்கி இப்போதும் கோரிக்கைளை முன்வைப்பதில் காலத்தை விரயம் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால், கொழும்போ மிகவும் சிறப்பாக நடுநிலை, அணிசாரா என்னும் சுலோகங்களுடன் அவர்களது இராஜதந்திர கலையை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். முன்னர் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்னும் அடிப்படையில் வெளிவிவகாரத்தை நகர்த்தினர்

இப்போது, பொருளாதார நெருக்கடியை முன்வைத்து காய்களை நகர்த்துகின்றனர். உண்மையில், ஒரு நாட்டின் நலன்களுக்கான இராஜதந்திரத்துக்கு வரையறைகள் இல்லை. வட்டங்களுக்குள் முடக்கப்படுவது இராஜதந்திரமல்ல. வரையறைகளை வகுத்துக் கொள்பவர்கள் இராஜதந்திரத்தை அறியாதவர்கள்.

இந்த பின்புலத்தில் மிகவும் இராஜதந்திரம் மிக்கவர்கள் சிங்களவர்கள் என்றால் இராஜதந்திரத்தையே அறியாதவர்கள் தமிழர்களாவர். இதுவரையான அனுபவங்கள் இதனையே நமக்கு உணர்த்துகின்றன

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 6



# இலங்கையில் முதலீடு செய்யுமாறு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு! வடக்கு கிழக்கில் விகாரைகளை அமைக்க வேண்டுமென அஸ்கிரிய பீடம் அழுத்தம்!

போரினால் ஏற்பட்ட அச்ச நிலை காரணமாக இடம்பெயர்ந்து பன்னாடுகளிலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் வர்த்தகங்களை முன்னெடுக்கவும், முதலீடுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு தேவையான ஒழுங்குகளை செய்யுமாறும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயத்தை ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன் போது ஜனாதிபதியிடம் கருத்துரைத்த ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார,

புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினர். குறிப்பாக, ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மையில், அவர்கள், நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளனர். சம்பிரதாயபூர்வமான தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை.

இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வளமான மாற்றத்தையே புலம்பெயர் தமிழர்கள் விரும்புகின்றனர். வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர்.

எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள்ளேன். எனவே, இந்த நேரத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிப்பது சிறந்தது என்று நீண்ட விளக்கத்தை அளித்தார்.



இதற்கு மறுமொழியளித்து ஜனாதிபதி ரணில் கூறுகையில், புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அழையுங்கள். அவர்களுக்கு தேவையன ஒத்துழைப்புகளை வழங்குங்கள். அரசியலில் ஈடுபடும்போது, உலக அரசியல் போக்கை போன்று தேசிய அரசியல் நகர்வுகள் குறித்தும் மதிப்பாய்வு செய்யுங்கள். இது அனைவருக்கும் முக்கியமானது என கூறினார்.

ஜனாதிபதி புலம்பெயர்ந்த தமிழர்களை நாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுக்கும் அதேவேளை வடக்கு கிழக்கில்



விகாரைகள் அமைப்பு, தொல்லியல் ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டுமென அஸ்கிரி பீடம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஞ ஶ்ரீஞானரத்தன தேரரை சந்தித்துள்ளார். இதன் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அஸ்கிரி மகாநாயக்கர் கடிதமொன்றினையும் கையளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள விகாரைகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வரலாற்று சிறப்புமிக்க வணக்கஸ்தலங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், தற்போது பல்வேறு மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் தொல்லியல் தொடர்பான வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு வெளித் தரப்பினர் வழங்கும் உதவிகளை பயன்படுத்த வேண்டுமெனவும் அந்தக் கடிததத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெறும் சம்பவங்களால் இனவாத மற்றும் மதவாத நெருக்கடிகள் உருவாவதாகவும், அந்தச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும்! - ஜனாதிபதி

தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் கூறுகையில், 'போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

எனினும், வடக்கு, கிழக்கு மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பமும் இதுவாக உள்ளது. எனது விருப்பமும் அதுவே.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை.

தீர்வை நாம் விரைந்து காண வேண்டும். தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை எனக்கு வழங்க வேண்டும் என்றார். இதேவேளை வடக்கு கிழக்கு மக்களுக்கு குறைந்த பட்ச நியாயத்தையாவது வழங்கியது ரணில் விக்ரமசிங்கவாகும். அவர் வடக்கு மக்களுக்கு நியாயத்தை வழங்கியதாலே தேர்தல்களின் போது தெற்கு சிங்கள மக்கள் அவரை தோற்கடித்தார்கள். வடக்கு மக்களுக்கு சலுகைகளை வழங்கிதாலே ரணில் விக்ரமசிங்க 2005 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார். அதனால் தமிழ் மக்களின் பிரச்சினையை ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால் இந்த பாராளுமன்றத்தில் வேறு எந்த தலைவருடனும் (22ம் பக்கம் பார்க்க)



Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 7



# கொழும்பில் கனடிய தூதரகத்திற்கு முன்னாள் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்

முப்படையினரும் பொலிஸாரும் இலங்கையில் தமிழினப்படுகொலையை மேற் கொண்டதாக தெரிவித்துள்ள கருத்தை கனேடியப் பிரதமர் மீளப் பெற வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏன் மௌனம் காக்கின்றார்? என காலி முகத்திடல் மக்கள் அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது.

கனேடிய பிரதமரின் கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டு காலி முகத்திடல் மக்கள் அமைப்பு இன்று கொழும்பிலுள்ள கனடா உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு கடிதமொன்றையும் கையளித்திருந்தது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட் காலி முகத்திடல் மக்கள் அமைப்பின் உறுப்பினர் பலங்கொட கஸ்வத்த தேரர்.

இலங்கையில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தமிழ் இனப் படுகொலை செய்துள்ளனர் என கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார். இவ்வாறான கருத்துக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளிக்க வேண்டியதில்லை. மாறாக ஜனாதிபதியும் பிரதமரும் நேரடியாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவித்திருக்க வேண்டும்.

கனேடிய பிரதமரின் ஆதரமற்ற கருத்துக்களை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கனடா அறியாத பல தகவல்களை நாம் இந்தக் கடிதத்தில் உள்ளடக்கியுள்ளோம்.

தளதா மாளிகை மீதான தாக்குதல்கள் , ஸ்ரீமகா போதி தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அந்த சந்தர்ப்பத்தில்




தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு பேரூந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களின் காரணமாக எமக்கும் பதில் தாக்குதல்களை நடத்த வேண்டியேற்பட்டது. இறுதியில் அனைத்து இன மக்களும் அழிவை எதிர்கொண்டனர். இவற்றை ஜனாதிபதியும் , பிரதமரும் கனடாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏன் அமைதி காக்கின்றார்?

சிங்கள பௌத்த மக்களை இனவாதிகளெனக் குறிப்பிட்டு எமக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மறுக்கின்றனர்.

ஜனாதிபதியும் , பிரதமரும் இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்கா விட்டால் நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்போம். எனவே கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்துக்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றார்.

# அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனப் போட்டியில் ஈழத்தமிழ் மாணவர் சாதனை!



ஈழத் தமிழ் மாணவன் சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளார். போருக்குள் பிறந்து, வளர்ந்து தாய் நிலத்தில் இருந்து அகதியாக தத்தளித்துச் சென்ற இந்த மாணவனின் சாதனை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்று வருகிறது.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்று வரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் மேனகா தம்பதிகளின் புதல்வனான அர்ச்சிகன் அமெரிக்காவில் உள்ள விண்வெளி குறித்த நிறுவனமான National Space Society (NSS) சர்வதேச ரீதியாக மாணவர்களிடையே நடாத்திய போட்டியில் வெற்றி பெற்று ஈழத்தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக NATIONAL SPACE SOCIETY (NSS) அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26725 பேர் பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை NSS அங்கீகரித்து அவர் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாநிலத்தில் NSS அமைப்பின் தலைமையில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப்பட்டிருப்பதுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

இன்று சாதனை மாணவனாக பாராட்டுப் பெறும் அர்ச்சிகன் தாயகத்திலிருந்து தனது பெற்றோரோடு அனைத்தையும் இழந்து, வலிகளை மட்டுமே சுமந்து கொண்டு, அகதியாக இந்தியாவிலே தஞ்சமடைந்திருந்தார்.

இம் மாணவனின் சாதனை எந்தச் சூழலிலும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்நிலையில் உலகம் முழுவதும் பல்வேறு தரப்பினரிடமிருந்து அர்ச்சிகனுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது.

அர்ச்சிகன் மென்மேலும் கல்வியில் சிறந்து பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வளர வேண்டுமென ஈழநாடு வாசகர்கள் சார்பில் பாராட்டுகின்றோம்! வாழ்த்துகின்றோம்!

# யூன் 21 கனடா படுகொலை தினம்:- அறிவிக்க வேண்டுமென்கின்றார் விமல் வீரவன்ஸ



கனடாவில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் 1996ஆம் ஆண்டு ஜீன் மாதம் 21 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்கள். ஆகவே எதிர்வரும் ஜஜீன் 21 ஆம் திகதியை 'கனடா படுகொலை தினம்' என நாம் அனுஷ்டிக்க வேண்டும். இலங்கை தொடர்பில் கனடா நாட்டு பிரதமர் குறிப்பிட்ட கருத்து முறையற்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சபையில் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது.

மே 18 இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது என குறிப்பிட்டு கனடா நாட்டு பிரதமர் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி நாட்டை அவமதித்துள்ளார். இலங்கை தொடர்பில் கருத்துரைக்கும் கடனாவின் வரலாற்று பக்கத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

1996 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 21ஆம் திகதி கனடா நாட்டில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கனடாவில் தான் உண்மையில் இனப்படுகொலை இடம் பெற்றது. எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி அந்த தினத்தை நாம் 'கனடா இனப்படுகொலை தினம்' என பாராளுமன்றத்தின் ஊடாக அனுஷ்டிக்க வேண்டும்.

இலங்கையில் இடம் பெறாத இனப்படுகொலையை கனடா அனுஷ்டிக்கும் போது கனடாவில் இடம்பெற்ற இனப்படுகொலையை நாம் அனுஷ்டிக்க வேண்டும். அதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# கனடாவிற்கும் குற்றஉணர்வு இருக்கிறது - சரத் வீரசேகரா

தமிழீழ விடுதலைப்புலிகளால் அடைய முடியாத இலக்கினை தமிழ் டயஸ்போறா அமைப்பினர் அடைவதற்கு முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் என்ற போர்வையில் இலங்கைக்கு எதிராக கூட்டுச் சதியினை தமிழ் டயஸ்போறாக்கள் முன்னெடுப்ப தாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு தமிழீழம் தேவையில்லை என தெரிவித்த அவர் தெற்கிலும் தமிழர்கள் வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டார். ஆனால் கொழும்பில் வாழுகின்ற சில தமிழ் அரசியல்வாதிகளே தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக ஈழம் என்ற கோசத்தினை எழுப்புவதாகவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் குடித்தொகை குறைந்து வருவதனால் அங்கு சென்றுள்ள தமிழர்கள் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருவதாக சரத் வீரசேகர சுட்டிக்காட்டு கின்றார்.

கடந்த 14 வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டில் இருந்த பயங்கர வாதத்தை தோற்கடித்துள்ளோம். அரசியல் இலாபங்களை அடைவதற்காக அப்பாவி மக்களை படுகொலை செய்வதே பயங்கரவாதம். ஆனால் போரை நாங்கள் நியாயப்படுத்த முடியாது ஆனால் பயங்கர வாதத்தை நியாயப்படுத்த முடியும். கனடாவில் அரசியல் ரீதியிலான விடயம் இருக்கின்றது.

தமிழ் இனப்படுகொலையை கொண்டாடும் நோக்கில் கனேடிய நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட பிரேரணை அங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் கனேடிய



தமிழர்கள் இவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கனடாவில் காணாமல் போன ஆதிவாசிகள் படுகொலை செய்யப்பட்ட விடயத்தை ஏன் தமிழர்கள் கதைக்கவில்லை கனடாவிற்கும் குற்ற உணர்வு இருக்கின்றது ஆனால் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேசத்திற்கு போதிக்கின்றது என்றார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா? ஜனநாயகப் போராளிகள் கட்சியிடம் துருவித்துருவி விசாரணை!

விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடுகின்றதா என கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தன்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர மேலும் தெரிவிக்கையில், கடந்த எட்டு ஆண்டுகளாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் எமது ஜனநாயக போராளிகள் கட்சி தேசிய மாநாடு ஒன்றையும் நடத்தி இருக்கின்றது. தமிழ் தேசிய அரசியல் கட்சிகளோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அங்கம் வகிக்கின்றோம்.

கடந்த 11ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து எனது வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். விசாரணையின் பின்னர் 15ஆம் திகதி மீண்டும் பயங்கரவாத தடுப்பு பிரிவு கொழும்பு அலுவலகத்திற்கு வருமாறு கூறினார்கள்.

எனினும் கட்சி பணிகள் உள்ளதால் குறித்த திகதியில் என்னால் வரமுடியாது பிறிதொரு திகதியில் வருவதாக கூறியிருந்தேன். எனினும் அவர்கள் 16ஆம் திகதி மீண்டும் எனது வீட்டுக்கு வந்து என்னிடம் நான்கு மணித்தியாலமும் 50 நிமிடங்களும் விசாரணைகளை மேற்கொண்டார்கள்.

மூன்று பேர் கொண்ட குழுவினர் இந்த விசாரணை நடவடிக்கைகள் ஈடுபட்டிருந்தனர். என்னையும் எனது குடும்பத்தையும் மிரட்டும் வகையில் இவர்களது



விசாரணை அமைந்திருந்தது. குறிப்பாக இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்று அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் நல்லுறவு போன்று காட்டிக் கொண்டாலும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி டெல்லியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் நான் கலந்து கொண்டமை தொடர்பாக விசாரித்தார்கள்.

குறித்த மாநாட்டில் பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும், மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் உரிமை, 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விடயங்களை நான் இந்தியாவிடம் வலியுறுத்தி இருந்தேன்.

ஜனநாயக போராளிகள் கட்சி இந்தியா எவ்வாறான ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்தியா பணம் வழங்குகின்றதா? போன்றவற்றை இவர்கள் விசாரணைகளின் போது கேட்டிருந்தார்கள். இந்தியா இங்கு என்ன செய்யுமாறு தங்களை பணித்துள்ளார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் கூறினேன், இந்திய அதிகாரிகளை சந்தித்தால் அவர்கள் இலங்கை நாட்டு மக்களின் சுதந்திரமான வாழ்வினை விரும்புவதாக என்று கூறுவார்களேயொழிய, தமிழ் மக்கள் தொடர்பாக எந்த விதமான கருத்துக்களையும் அவர்கள் கூறுவதில்லை என்றேன்.

குறிப்பாக இந்தியா பணத்தினை தந்து இலங்கை அரசுக்கு எதிராக செயல்பட சொல்கின்றதா என்ற தொனியில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்திய அரசாங்கம் இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை சந்தித்தபோது இலங்கைக்கு முதலாவதாக உதவி செய்து இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டிருந்தது. என்பதனையும் நான் சுட்டிக் காட்டி இருந்தேன்.

இவர்களின் இத்தகைய விசாரணைகள் தொடர்பாக இந்திய தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு நாங்கள் இவர்களின் விசாரணை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கின்றோம்.

குறிப்பாக சில தமிழ் அரசியல்வாதிகளும் போராளிகளை காட்டிக் கொடுத்து அரசுடன் இணைந்து சதி முயற்சி செய்கின்ற தகவல்களும் எமக்கு கிடைத்திருக்கின்றன. எனவே தமிழ் அரசியல்வாதிகள் போராளிகள் மீது இவ்வாறு கட்டவிழ்த்து விடப்படும் விசாரணைகள் தொடர்பில் மௌனம் காக்காது அதற்கு குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவு தினம், தியாகி திலீபன் நினைவு தினம், மாவீரர் நாள் நினைவு தினங்களை நீங்கள் எவ்வாறு செய்கின்றீர்கள்? பணம் யார் வழங்குகிறார்கள் போன்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியிருந்தார்கள். இதற்கு புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பின் மூலமே நாங்கள் இத்தகைய விடயங்களை செய்கின்றோமேயொழிய எந்த ஒரு நாட்டினுடைய நிதி பங்களிப்பில் இத்தகைய நிகழ்வுகளை செய்வதில்லை என்பது தொடர்பில் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். அவர்கள் மீண்டும் கேட்டார்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்தியா உங்களுக்கு பணம் வழங்குகின்றதா? என்பது தொடர்பில் அவர்களுடைய கேள்வி அமைந்திருந்தது.

குறிப்பாக ஜனநாயக போராளிகள் கட்சியினுடைய ஆவணங்களையும் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு கூறியிருக்கின்றார்கள் அதற்கு நான், எங்களுடைய ஆவணங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்று கூறினேன்.

தினமும் ஆவணங்களை வழங்குமாறு தொலைபேசி அழைப்பு எடுத்த வண்ணம் உள்ளார்கள். இந்த நாட்டினுடைய அதிபர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றோம்.

ஜனநாயக ரீதியாக செயற்படுகின்ற எங்களை நீங்கள் இவ்வாறான அடக்குமுறைகள் மூலம் எம்மை கட்டுப்படுத்த முயற்சித்தால் அது வேறு விளைவினை ஏற்படுத்தும் என்பதையும் நாம் கூறிவைக்க விரும்புகின்றோம்.

குறிப்பாக இந்தியா விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றதா? என்றும் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவா தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொண்டார்கள். குறிப்பாக ஆயுதம், பணம் என்பவற்றை வழங்கி மீள் உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றார்களா? என்றும் அவர்கள் கேட்டார்கள் - என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இனப்பாகுபாடும் இன ஒதுக்கலுமே எழுபது ஆண்டுகளில் இனப்படுகொலையானது!

கட்டுரையாளர்:-
கனடாவில் இருந்து
- பனங்காட்டான் -

முள்ளிவாய்க்கால் தமிழினப் பேரழிவின் பின் 14வது ஆண்டு நினைவேந்தல் வழமையான உணர்வுபூர்வ நிகழ்வு என்பதற்கு அப்பால் சர்வதேச மட்டத்திலும் அரசியல் ரீதியான சிறு அசைவையும் காட்டியுள்ளது.

2009ல் இரத்தத்தில் தோய்ந்த மண்ணை மக்கள் கண்ணீரால் நனைத்து, அந்த நிலத்தின்மீது அழுதும் உருண்டும் தொழுதும் தங்கள் வலியை தீர்த்துக் கொள்ள முனைந்ததை நினைவேந்தல் நாளில் காண முடிந்தது.

தாயகத்தின் நினைவேந்தல்களுக்கு நிகராக தலைநகர் கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வு இங்கே பதிவு செய்யப்பட வேண்டியது. கடந்த வருடம் காலிமுகத் திடலில் அரகலய போராட்டம் நடந்த வேளை இன மத பேதமின்றி முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிக்கப் பட்டது.

இம்முறை தலைநகரில் பொரளையிலுள்ள கனத்தை பொதுமயான சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் சிங்கள சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. காணாமலாக்கப்பட்ட மூத்த ஊடகவியலாளர் பிரகித் எக்னலியகொடவின் பாரியார் சந்தியா எக்னலியகொட மற்றும் சிங்கள இளையோர் பங்கு பற்றிய இந்நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை வா.சக்திவேலும் பங்கேற்றிருந்தார்.

இந்நிகழ்வை புலிகளை நினைவு கூரும் வைபவம் என்று கூறியவாறு குழப்புவதற்கு பௌத்த அமைப்புகளின் சிலர் முயன்றனர். அவர்களுக்கு இயைவாக பொலிசாரும் சேர்ந்து இதனை நிறுத்துவதற்கு கடுமையாக முற்பட்டனர். கலகம் அடக்கும் பொலிசாரும் குவிக்கப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் தமிழின பேரழிவை அரசியல் மயமாக்காது மக்களின் படுகொலைக்கான ஒன்றாக ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டதால் எண்ணியவாறு அதனை நடத்தி கஞ்சி வழங்கப் பட்டதுடன் நிறைவு செய்யப்பட்டது.

1983 யூலை 23ல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரின் சடலங்கள் இதே கனத்தை மயானத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்தே கொழும்பில் திட்டமிட்ட பாரிய இனஅழிப்பு மேற்கொள்ளப்பட்டது. இன்னும் இரண்டு மாதங்களில் அதன் நாற்பதாவது ஆண்டு நினைவேந்தலும் இடம் பெறவுள்ளது.

கடந்த வார முள்ளிவாய்க்கால் தமிழின பேரழிப்பினையொட்டி கனடிய அரச மட்டத்திலிருந்து வெளியான இரண்டு அறிக்கைகள் அனைத்துலக மட்டத்தில் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன.

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விடுத்த அறிக்கையில், 'முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட போரில் பல்லாயிரக் கணக்கான தமிழர் தங்கள் உயிரை இழந்துள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்க் கனடியர்களின் கதைகளை நான் அறிந்திருந்தேன்.

அதனால் தான் மே 18ஐ தமிழின படுகொலை நாளாக கடந்த ஆண்டு கனடிய நாடாளுமன்றம் பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது' என்று குறிப்பிட்டுள்ளதுடன் தமிழர்களின் உரிமைக்குக்குரல் கொடுப்பதை கனடா ஒரு போதும் நிறுத்தாது என்றும் பிரதமர் ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

கனடிய எதிர்க்கட்சித் தலைவரான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லிவ்றே விடுத்துள்ள அறிக்கையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோதபாய ராஜபக்சவை கைது செய்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென கோரியுள்ளார்.



இலங்கையில் இடம் பெற்றது இனப்படுகொலை என்பதை இவரது அறிக்கையும் வலியுறுத்தியுள்ளதுடன், 2013ல் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சிமாநாட்டை கனடா புறக்கணித்ததையும் நினைவுபடுத்தியுள்ளார்.

கனடிய உள்நாட்டு விவகாரங்களிலும் அரசியல் தீர்மானங்களிலும் எதிரும் புதிருமாக மோசமான வார்த்தைகளால் பொதுவெளியில் மோதிக் கொண்டிருக்கும் பிரதமர் ரூடோவும், எதிர்க்கட்சித் தலைவர் பொய்லிவ்றேயும் ஈழத்தமிழர் இனப்படுகொலை விடயத்தில் ஒரே கருத்துள்ளவர்களாக அறிக்கையிட்டு கனடிய ஈழத்தமிழரை ஆற்றுப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

மே 18ம் திகதிக்கு முன்னரான ஒரு வாரத்தை தமிழின அழிப்பு கல்வி வாரமாக ஒன்ராறியோ மாகாண அரசின உறுப்பினர் விஜய் தணிகாசலம் முன்மொழிந்த பிரேரணை சகல கட்சிகளினதும் ஏகோபித்த ஆதரவுடன் 2022ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டதையிட்டு கோபமடைந்துள்ள இலங்கை அரசும் அதன் ஆதரவாளர்களும், அதனை எதிர்த்து தொடர்ச்சியாக கனடிய நீதி மன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் வேளையில், கனடியப் பிரதமரதும் எதிர்க்கட்சித் தலைவரதும் இனப்படுகொலையென சுட்டும் அறிக்கை இலங்கை அரசுக்கு மேலும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் வெளிப்பாடாக கொழும்பிலுள்ள கனடியத் தூதுவரை அழைத்து இலங்கை அரசின் ஆட்சேபனையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளதுடன் கனடிய பிரதமரின் அறிக்கையையும் கண்டித்துள்ளார்.

கனடாவாழ் தமிழ் மக்கள் இனப்படுகொலை விடயத்தில் மேற் கொண்ட முன்முயற்சிகள் போன்று பூகோளப் பந்தின் சகல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் ஊடாக இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை விஜய் தணிகாசலம் முன்வைத்திருப்பது அனைரதும் கவனத்துக்கு உட்படுத்தப் பட வேண்டியது.

வலி சுமக்கும் தமிழர் மன உளைச்சலால் ஏற்படும் உணர்வு இடைக்கிடை தொய்வடைந்து போவதற்கான காரணம் என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மாவீரர் நாள், மே 18 இன அழிப்பு நாள், யூலை மாத கறுப்பு வாரம், திலீபன் மற்றும் அன்னை பூபதியின் நினைவு நாள் போன்ற முக்கிய காலங்களில் மட்டும் உணர்வுபூர்வமாக இயங்கும் இவர்கள் மற்றைய நாட்களில் மறந்தவர்களாக இருப்பது ஏன்?

தமிழ் மக்களிடம் சரியான அரசியல் தலைமை இல்லாமையே இதற்கான காரணம். எடுத்ததற்கெல்லாம் தங்களுக்குள்ளேயே போட்டி அறிக்கை, கண்டன



அறிக்கை, எதிர்ப்பு அறிக்கைகள் என்றே இவர்கள் காலத்தைப் போக்குகின்றனர். தமிழ் மக்களின் தனிப்பெரும் அரசியல் தலைமையான தமிழரசுக் கட்சி தொய்வு நோயாளி போலாகியுள்ளது. கட்சியின் உள்ளக கூட்டப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சிங்கள பொலிசாரின் உதவியை நாடும் நிலைமை வெட்கக்கேடானது.

இந்த விண்ணாணத்தில் இலங்கை அரசுடன் தமிழ் கட்சிகள் ஒரே மேசையில் அமர்ந்து பேசப் போனால் எவ்வாறு பிரச்சனையைத் தீர்க்க முடியும்? இவர்களின் ஒற்றுமையின்மையும் பிளவுபாடும் சிங்களத் தலைமைகளுக்கு காலத்தை இழுத்தடிக்க வாய்ப்புக் கொடுக்கிறது. அத்துடன் பிரச்சனை களுக்கான தீர்வை கானல் நீராக்கிக் கொண்டு போகிறது.

தமிழர் மீதான சிங்கள தேசத்தின் தாக்குதலை இனப்படுகொலை என அழைக்கலாமா என்ற கேள்வியும் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கிறது. இதற்கான விடை காண எழுபது ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

1956 இலிருந்து தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை இனக்கலவரம் என்று அழைக்கவே இவர்கள் விரும்புகின்றனர். கலவரம் என்பது இரு பகுதியினரும் மோதிக் கொள்வது. காலாதி காலமாக சிங்களவரால் தமிழர் தாக்கப்பட்டதை ஒப்புக்குக் கூட இனக்கலவரம் என்று கூறமுடியாது.

இனப்பாகுபாடு, இனஒதுக்கல், இனரீதியான தாக்குதல்கள் என ஆரம்பித்து உருவானவை 1958 மற்றும் 1983களில் இனஅழிப்பாக மாற்றம் பெற்றன. அரச இயந்திரங்கள் இதன் பின்னணியில் இயங்கியதால் இன அழிப்பு இலகுவாக நிறைவேற்றப்படுகி றது.

2009ல் முள்ளிவாய்க்காலில் தமிழரை அவர்களின் பூர்வீக மண்ணில் கொன்று குவித்ததையும் காணாமல் போகச் செய்ததையும் இனசங்காரம் என்றே கூற வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் மே மாதம் 19ம் திகதியை போர்வீரர் தினமாக இலங்கை அரசே பிரகடனம் செய்து வெற்றிக் கொண்டாட்டம் நடத்துகிறது.

வருடாவருடம் இந்நாளில் பல்லாயிரக் கணக்கான படையினருக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. இவ்வருடம் 3,750 படையினர் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இது, தமிழின சங்காரத்துக்காக சிங்கள தேசத்து படைகளுக்கு சிங்கள ஆட்சி பீடம் வழங்கும் அதி உயர் பரிசு.

தங்கள் பூர்வீக மண்ணில் தங்கள் பிறப்புரிமையைக் கேட்ட தமிழரை கொன்று குவித்து அதில் போர் வெற்றி கொண்டாடும் ஓர் அரசிடமிருந்து எந்த வகையில் அரசியல் தீர்வை எதிர்பார்க்க முடியும்? தமிழர் தேசம் சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் முள்ளிவாய்க்கால் மட்டுமல்ல. தமிழினப் படுகொலைகளை நித்தம் நித்தம் உரத்துக் கூறுவோம். ஒன்றாகக் கூறுவோம். இதனை நாங்கள் கூறவில்லையென்றால் வேறு யார் கூறுவது? நன்றி:- யாழ்.ஈழநாடு

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 10



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

20 மே 2023 முதல் 26 மே 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜா இராஜேந்திரராஜா

மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 20 மே 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லப்பா பாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 31மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## கனடா - இலங்கை ராஜீய மோதல்கள்


(19ம் பக்கத் தொடர்ச்சி) வெளியிடுவதற்கு முன்னர், உண்மையான வரலாற்றை தேடி பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் எமது இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை தொடர்ந்தும் தவறான வழிக்கு அழைத்து செல்கின்றனர் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை குறித்து முன் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்நாட்டு நீதிமன்ற கட்டமைப்பிற்குள் வழக்கு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில், அதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும் என மாற்று கொள்கைக்கான மத்திய நிலையத்தின் மூத்த நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, பிபிசிக்கு தெரிவிக்கின்றார்.

தமிழர் இனப்படுகொலை தினத்திற்காக கனடா பிரதமரால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக் கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர்களது நாட்டில் புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் கனடா அரசாங்கத்திற்கு கூறியுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டே, பிரதமர் இதனைக் கூறியுள்ளார்'

எனினும், அங்குள்ள தமிழ் பிரஜைகள் இந்த விடயங்கள் தொடர்பில் கதைத்துள்ளனர். அந்த எண்ணப்பாட்டையே ஏற்படுத்தியுள்ளனர். அதுவே அவர்களின் நிலைப்பாடாக காணப்படுகின்றது. இந்த தலைப்பு தொடர்பில் வெவ்வேறு எண்ணங்கள் இருக்கக்கூடும். நினைத்ததை பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. அவர்கள் கூறுவதை நிராகரிப்பதற்கு எமக்கு உரிமை உள்ளது.' இதனை தீர்ப்பதற்கு இலங்கையில் வழக்கு தாக்கல் செய்து, குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்து தீர்க்க வேண்டும். இல்லையென்றால், சர்வதேச ரீதியில் தகுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.'

இலங்கை இதற்கு முகம் கொடுக்க தவறும் பட்சத்தில், இதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும். அது தான் நடக்கக் கூடும். நாம் நடவடிக்கை எடுப்போமாயின், நாம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வோமாயின், நாம் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்போமாயின், சர்வதேச ரீதியில் எந்தவொரு பிரச்னையும் கிடையாது. எனினும், நாம் ஒன்றையும் செய்யாவிடின், சர்வதேச மட்டத்திற்கு செல்லக் கூடும்' என அவர் கூறுகின்றார். நன்றி:- பிபிசி



உ

சுவாமியே சரணம் ஐயப்பா

கனடா ஸ்ரீஜயப்பன் இந்து ஆலயம்

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO

(CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE)

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 . Tel: 416.321.6104

www.ayyappan.com Facebook:Canada Sri Ayyappan Hindu Temple

ஐயப்பன் ஆலய பாடசாலை

தமிழ், சமயம் இலவச வகுப்புக்கள்

அன்புடையீர்,

கோவிற் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த தமிழ், சமய வகுப்புக்கள் மீண்டும் 3.06.2023 சனிக்கிழமை மதியம் 1.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இடம் பெறும். தொடந்து மாதம் தோறும் பிரதி சனிக்கிழமைகளில் மதியம் 1.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தமிழ், சமய வகுப்புக்கள் இலவசமாக இடம் பெறும்.

நிர்வாக சபையினர் தொடர்புகளுக்கு -416-321-6104

Eelanadu 26 May 2023.qxp_Layout 1  2023-05-25  5:01 PM  Page 11




# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 மே 2023 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




20 மே 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமஸ்கந்தன் வர்ஷிகா தம்பதிகளின் செல்வப் புதல்வி அஞ்சனாவின் பூப்புனித நீராட்டு விழாவாகும். அன்றையதினம் செல்வி அஞ்சனா அவர்கள் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




20 மே 2023 சனிக்கிழமை மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




உ
ஜெயதுர்க்கா துணை
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

## விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் 2023

ஆரம்பம்
19 – 05 – 2023



பூர்த்தி
28 – 05 – 2023

*திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.*

நிகழும் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 5ம் நாள்(19-05-2023)வெள்ளிக்கிழமை அன்று விக்னங்கள் தீர்க்கும் விக்னவிநாயகப் பெருமானின் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ்வரிய திருநாட்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

### விக்னவிநாயகர் அலங்கார உற்சவ விபரம்

மாலை 5.30 அபிஷேகம் (ஸ்நபனம்), 7.00 பூஜை, 7.30 கலை நிகழ்ச்சி, 8.00 வசந்தமண்டபப் பூஜை, தொடர்ந்து அருள் மிகு விக்ன விநாயகர் வீதியுலா வருதல், பிரசாதம் வழங்குதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| | 18-05-2023 | வியாழன் காலை | கணபதி ஹோமம் | இ.ராகவன் குடும்பம் |
| 1ம் திருவிழா | 19-05-2023 | வெள்ளி | மூஷிக வாகனம் | விசுவலிங்கம் குடும்பம் |
| 2ம் திருவிழா | 20-05-2023 | சனி | யானை வாகனம் | ம.மனோகரன் குடும்பம் |
| 3ம் திருவிழா | 21-05-2023 | ஞாயிறு | சிம்ம வாகனம் | இராஜேஸ்வரன் விஜித்தா குடும்பம் |
| 4ம் திருவிழா | 22-05-2023 | திங்கள் | பூதவாகனம் | வே.செல்வரட்ணம் குடும்பம், உறவினர்கள் |
| 5ம் திருவிழா | 23-05-2023 | செவ்வாய் | மாம்பழத் திருவிழா | அரியாலையூர் மக்கள் |
| 6ம் திருவிழா | 24-05-2023 | புதன் | மஞ்சம் | சதானந்தன் குடும்பம் |
| 7ம் திருவிழா | 25-05-2023 | வியாழன் | வேட்டை | கணேசன் சுப்பிரமணியம் |
| 8ம் திருவிழா | 26-05-2023 | வெள்ளி | சப்பறம் | காரை அன்பர்கள் |
| 9ம் திருவிழா | 27-05-2023 | சனி காலை | தேர்(இரதோற்சவம்) | பொதுஉபயம் (பக்தர்கள் உபயத்திற்கு பதியவும் |
| | | சனி மாலை | தேரடித் திருவிழா | |
| 10ம் திருவிழா | 28-05-2023 | ஞாயிறு காலை | 1008 சங்காபிஷேகம் | மு.ரஜிவீகரன் R.J Multi pac Inc |
| | | ஞாயிறு மாலை | பூந்தண்டிகை | அலங்கார வீதியுலா |
| | 29-05-2023 | திங்கள் காலை | பிராயச்சித்த அபிஷேகம் | வி.விஜியசேகர் குடும்பம் |
| | 30-05-2023 | செவ்வாய் | பூங்காவனம் | (R.J Multi Litho Staff) |
| | 02-06-2023 | வெள்ளி | வைரவர்மடை | கு.ராஜ்குமார் |

குறிப்பு:விக்கவிநாயகர் தேர்திருவிழா, அன்றைய நாள் கும்பாபிஷேக தினம் ஆகையால் சகல விக்கிரகங்களுக்கும் விஷேட அபிஷேகம் பூசை ஆராதனை நடைபெறும்

**சப்பறத் திருவிழா**
5.00(மாலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
7.00(மாலை) மூலமூர்த்தி பூஜை
7.30(மாலை) கலைநிகழ்ச்சி,
வசந்தமண்டப பூஜை இடம்பெற்று விநாயகர் சப்பறத்தில் வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

**தேர்த்திருவிழா**
8.00(காலை) அபிஷேகம்(ஸ்நபனம்)
9.30(காலை) மூலமூர்த்தி பூஜை
10.30(காலை) வசந்தமண்டபபூஜை
11.30(மதியம்) தேர் வீதிவலம்.
தொடர்ந்து பச்சைசாத்தப்பெற்று அவரோகணம் நிகழ்ந்து பஞ்சமுக அர்ச்சனைகள் இடம்பெறும்.

**1008 சங்காபிஷேகம்**
காலை 7.00 மணிக்கு அபிஷேகம் தொடர்ந்து
11.30 மணிக்கு மூலமூர்த்தி, வசந்த மண்டபப் பூஜைகள் நடைபெற்று வீதியுலாவரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

தேர்த் திருவிழா பொது உபயம். இவ் உபயத்தில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் ஆலயத்தில் பதிவு செய்து நீங்களும் உபயகாரர்களாகி, சகல விக்கினங்களையும் தீர்க்கும் விக்ன விநாயகப் பெருமானின் தெய்வீக அருள் பெற்றுய்வீர்களாக!
ஓம் விக்ன விநாயக நம

1808 Drew Road. Mississauga
905 612 1856

Gprinters 905 629 8089

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 12

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 14




PREMIER DIAGNOSTIC NETWORK

647·660·0699
www.pdxn.ca

Scan for Online Booking

# RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

**BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD**
North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

**BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD**
South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

**BELLESMERE CARDIAC CLINIC**
North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

**BRIMLEY CARDIAC CLINIC**
South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

## ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

## FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

# மதில் மேல் இருக்கும் ஆமைகள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



மற்றொரு மே 18ம் கடந்து போய் விட்டது. இது பதினாலாவது மே18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது?

மே 18ஐ தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமை போல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன: வெளிக்களப்பயிற்சி நிலையப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி போய்க் கொண்டிருக்க, ஏனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சி கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கி குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பது. போல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?

மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாள்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது?

ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக் கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்க தினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4.000பேர் வரை கூடினதாக கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும். ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிகன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்ற வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.



இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக் கூடாது என்பதோடு. துக்கத்தை அனுஷ்டிக்கப் போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயக மயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும். இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக் கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அக்கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும். அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அக் கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது.

தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது.ஆனாலும். தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருகிகிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ரொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை. மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புலனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அது போல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை உருவாகி வருகிறது?

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்க வேண்டும் குழப்ப வேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள் தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இரு வேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான். இந்த இடத்தில் இதைப் பற்றிக் கதைக்க வேண்டும். ஏனென்றால், நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக் காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப் பற்றிப் பேச முடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப் போனதன் பின்னணியில் தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன. இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு.

ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள்.

இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள்.ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியற் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்க வைத்து விடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்பட முடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறி விடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்து வரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந ்தான். எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத் திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது; குடிமக்கள் சமூகமும் கிடையாது. கட்சிக் கூட்டுக்களும் கிடையாது.அதனால் கடந்த 14ஆண்டுகளாக தமிழ் மக்கள் அவிழ்த்து விடப்பட்டபாக்கு மூட்டை போல சிதறிக் கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக் கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப் போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்களபௌத்த மயமாக்கல் நிலப்பறிப்பு பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது மிழ்மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்து வருவது! இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை.

அந்த வெற்றிடத்தில் தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத் தன்மை மிக்க ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க முடியாத மக்களாகத் தமிழ் மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலை தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்கால கட்டத்தில் அது தொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த்தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன.வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும் பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக்

(22ம் பக்கம் பார்க்க)

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 16



22 மே 2023:-

1958ம் ஆண்டு இனக்கலவரம் இடம் பெற்று 65 ஆண்டுகள்! மறக்குமா தமிழினம்?

# சிங்களப் பத்திரிகைகளை வாசிக்க முடியாதவர்களை தேடி அலைந்த காடையர்கள்

பிரிட்டனின் காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையிலிருந்து முழுமையாக வெளியேறுவதற்கு முன்னர் ஆரம்பமான இனப்படுகொலை செயற்பாடுகளின் வெளிப்பாடே 1958ம் ஆண்டின் தமிழர்களிற்கு எதிரான இனவன்முறைகள்.



1958ம் ஆண்டு இனகலவரங்கள் எனவும் அழைக்கப்படும் இந்த இனபடுகொலை ஸ்ரீலங்காவில் தமிழ் ஈழத்தில் ஈழத்தமிழர்களிற்கு எதிராக அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற முதலாவது இனபடு கொலையாகும்.

1958ம் ஆண்டு 22ம் திகதி சிங்களக் காடையர்கள் இலங்கையின் பல பகுதிகளில் தமிழர்களை தாக்கத் தொடங்கினார்கள் கொலை செய்ய ஆரம்பித்தனர் பாலியல் வன்முறைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். 22ம் திகதி ஆரம்பமான இந்த வன்முறைகள் 29 மே வரை நீடித்தன

1958ம் ஆண்டு அவசரகாலநிலை அறிவிக்கப்பட்ட பின்னரும் சிறியளவில் தமிழர்களிற்கு எதிரான வன்முறைகள்தொடர்ந்தன. இந்த வன்முறைகளில் சிக்கி 300 முதல் 1500 தமிழர்கள் உயிரிழந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது, ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர் தமிழர்களின் வீடுகள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன அழிக்கப்பட்டன – தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைகளிற்கு இலக்கானார்கள். வவுனியாவில் இடம்பெறவிருந்த சமஸ்டி கட்சியின் மாநாட்டிற்கு சென்று கொண்டிருந்த தமிழர்கள் பொலனறுவையில் தாக்கப்பட்டதை தொடர்ந்தே இந்த வன்முறைகள் ஆரம்பமாகின

அதன் பின்னர் வன்முறை நாடு முழுவதும் பரவியது, கொழும்பில் காடையர்கள் சிங்கள பத்திரிகைகளை வாசிக்க முடியாதவர்களை தேடி அலைந்தனர், சிங்கள பத்திரிகைகளை வாசிக்க முடியாதவர்கள் தாக்கப்பட்டனர் கொல்லப்பட்டனர் இந்துமதகுரு ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார்,

ஐந்து நாட்கள் காத்திருந்த பின்னர் அரசாங்கம் அவசரகால நிலைமையை அறிவித்தது. தனது அரசியல் கண்ணோட்டத்தில் 1958ம் ஆண்டு கலவரம் முக்கிய இடத்தை வகித்தது என விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தெரிவித்திருந்தார். 1984 மார்ச் மாதம் வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

1958ம் ஆண்டு இனக் கலவரத்தின் அதிர்ச்சிகரமான நிகழ்வுகள் என் மீது கடும் தாக்கத்தை செலுத்தின, நான் பாடசாலை மாணவனாகயிருந்த வேளை எப்படி எனது மக்கள் சிங்கள இனவெறியர்களால் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டனர் என்பதை நான் கேள்விப்பட்டேன்.

நான் ஒருநாள் எனது குடும்ப நண்பரான விதவையொருவரை சந்தித்திருந்தேன், இந்த இன படுகொலையின் தனிப்பட்ட அனுபவங்களை அவர் என்னிடம் விபரித்திருந்தார் சிங்கள காடையர்கள் கொழும்பில் அவரது வீட்டை தாக்கியுள்ளனர் வீட்டிற்கு தீவைத்த அவர்கள் கணவனை கொலை செய்துள்ளனர், அவரும் அவரது பிள்ளைகளும் கடும் எரிகாயங்களுடன் உயிர்தப்பினார்கள், அவரது உடலில் காயங்களை பார்த்த வேளை நான் அதிர்ச்சியடைந்தேன்,.



கொதிக்கும் தாரில் எப்படி சிறுகுழந்தைகளை வீசினார்கள் என்பதை நான் அறிந்தேன் அவ்வாறான ஈவிரக்கமற்ற கொடுமைகளை நான் அறிந்தவேளை எனக்கு எனது மக்கள் மீது இரக்கமும் பாசமும் அதிகரித்தது. இந்த இனவெறி அமைப்பிலிருந்து எனது மக்களை விடுதலை செய்யவேண்டும் என்ற பெரும் ஆர்வம் எழுந்தது. ஆயுதமேந்தாத அப்பாவி பொதுமக்கள் மீது ஆயுதப்படையினரை பயன் படுத்தும் அமைப்புமுறையை எதிர்கொள்வதற்கு ஆயுதப்போராட்டமே ஒரே வழி என நான் கருதினேன் என விடுதலைப்புலிகளின் தலைவர் அந்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

சமஸ்டிக்கட்சியின் நீண்டகால தலைவர் விளன் நவரட்ணம் ( 1910 முதல் 2006) தமிழர் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும( 1991) என்ற தனது நினைவுக்குறிப்புகளில் இவ்வாறு குறிப்பிட்டார்.

1958ம் ஆண்டு இனக்கலவரம் இடம் பெற்ற வேளை அவர் கொழும்பில் வசித்தார் கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தில் சட்டத்தரணியாக பணியாற்றிக் கொண்டிருந்தார், 1962இல் ஊர்காவல் துறை தொகுதிக்காக இடம் பெற்ற இடைத்தேர்தலில் அவர் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

காடையர்களால் தான் தாக்கப்பட்ட வேளை எதிர்கொண்ட நெருக்கடியை அவர் இவ்வாறு வர்ணித்தார். வவுனியா மாநாட்டிற்கு மறுநாள் சிங்களஇராணுவத்தின் காடையர்கள் தமிழர்களை தாக்கும் பொறுப்பை ஏற்றனர். அவர்கள் தேவையற்ற அழிவுகள் மற்றும் விரும்பத்தகாத மிருகத்தனத்தில் ஈடுபட்டனர் கொழும்பின் புறக்கோட்டை பகுதியில் அவர்கள் தங்கள் வன்முறைகளை ஆரம்பித்தனர்

## கொதிக்கும் தாரில் வீசப்பட்ட குழந்தைகள்!

இங்கேயே தமிழர்களின் அனேகமான கடைகளும் வர்த்தக நிலையங்களும் வீடுகளும் வாகனங்களும் காணப்பட்டன

தங்களால் தாக்க முடிந்த தமிழர்களை எல்லாம் அவர்கள் தாக்கினார்கள் இரவான வேளை காடையர்களின் வன்முறை கொழும்பு நகரின் அனைத்து பகுதிகளுக்கும் புறநகர்பகுதிகளிற்கும் பரவியிருந்தது.

அன்றிரவு நாற்பது ஐம்பது காடையர்கள் ஹல்வ்ஸ்டிரொப்பில் உள்ள என வீட்டை தாக்கினார்கள். நான் நீதியமைச்சு மற்றும் உச்சநீதிமன்ற கட்டிடங்களிற்கு அருகில் வசித்தேன். நீதிமன்ற வாயில் ஊடாகவே அவர்கள் எனது வீட்டிற்கு வரவேண்டும் அவர்கள் 25 பெட்ரோல் குண்டுகளை வீசி எனது பெயரை சொல்லி சத்தமிட்டார்கள் எனது வீட்டின் முன்பகுதி சேதமாக்கப்பட்டது தளபாடங்கள் கதவுகள் தீப்பிடித்தன ஒன்றை மாத குழந்தை உட்பட 14 வயது சிறுவன் வரை வீட்டில் இருந்தனர். எங்களிற்கு ஏதாவது நடந்தால் அங்கிருந்து எங்காவது அவர்களை ஓடி விடுமாறு நாங்கள் கேட்டுக் கொண்டோம் மோசமான சம்பவங்களை எதிர்பார்த்து நாங்கள் கதவில் காத்திருந்தோம்.

டொக்டர் ஈஎம்வி நாகநாதன் சமஸ்டி கட்சியின் வலுவான ஆதரவாளரான அரசாங்க சேவையை சேர்ந்த இளம் ஊழியர் பாலசுப்பிரமணியம் என்பவருடன் என்னை பார்ப்பதற்கு அன்று மாலை வீட்டிற்கு வந்தார். நான் மறுத்த போதிலும் அவர் எனது வீட்டிற்கு சென்று சில ஆவணங்களை மீட்க வேண்டும் என வற்புறுத்தினார்.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் தலையில் காயங்கள் இரத்தம் தோய்ந்த ஆடைகளுடன் திரும்பி வந்தார் அவரது கார் சேதமாக்கப்பட்டிருந்தது

நான் மிகவும் கவனமாக நாகநாதனை கிரான்ட்பாஸில் உள்ள சுலைமான் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன் மருத்துவமனையில் கடவுள் மனிதர்கள் பார்ப்பதை விரும்பாத காட்சிகளை நான் பார்த்தேன். சிங்கள காடையர்களின் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் உயிருக்காக மாத்திரம் போராடவில்லை வலியால் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தனர் என்கிறார்.

**மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்**

மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 04 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 1808 Drew Road மிசிசாகாவில் அமைந்துள்ள ஜெய தூர்க்கா ஆலய மண்டபத்தில் இடம்பெறும். உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

– ஆலய நிர்வாகம்

# தென்னிலங்கை வல்லரசுகளின் பாதுகாப்பு அரணுடன் வடக்கு கிழக்கின் மீது ஆக்கிரமிப்பை வெற்றி கொள்கிறது?

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– K.T.கணேசலிங்கம் –

இலங்கைத் தீவின் மீது அமெரிக்க சீன வல்லரசுகளது போட்டி தொடர்ச்சியானதாக நகர்கிறது. கால இடைவெளியின்றி இராஜதந்திரிகளது வருகையும் உரையாடல் இராஜதந்திரமும் ஒத்துழைப்பு நடவடிக்கையும் இரு நாடுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விரு நாட்டினது நடவடிக்கைகளும் தென் இலங்கையை மையப்படுத்தி அமைய தென்னிலங்கை அரசாங்கமும் அதன் அரச இயந்திரமும் வடக்கு கிழக்கு உட்பட முழுத்தீவையும் தனது எதிர்கால இருப்புக்கான தயாரிப்புகளை நிகழ்த்தி வருகிறது.

குறிப்பாக தென் இலங்கையில் தேர்தலையும் பொருளாதார தளம்பலையும் கையாளும் அதே நேரம் வடக்கு கிழக்கில் மத மற்றும் இன முரண்பாடுகளையும் நிர்வாக மோதல்களையும் முதன்மைப் படுத்திக் கொண்டு செயல்படுகிறது. ஆட் கடத்தல், போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைகளை அளவுக்கதிகமாக கட்டவீழ்த்து விட்டு தமிழ் மக்களது சன்னதத்தை தேசியம் சார்ந்து குவியவிடாது தடுப்பதில் வெற்றி கண்டு வருகிறது.

இதனை தென்னிலங்கை ஆட்சி மட்டுமல்லாது ஏனைய அனைத்து தென் இலங்கை .அரசு, அரசு சாராத மற்றும் மத இயந்திரங்களும் கவனத்தில் கொண்டு செயல்படுத்துகிறன. இக் கட்டுரையும் அமெரிக்க–சீனப் போட்டிக்குள் தென்னிலங்கை இயங்கும் அரசியலைத் தேடுவதாக உள்ளது. இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராக மதத் துன்புறுத்தல்கள் நிகழ்வதாக 2022.ஆம் .ஆண்டுக்கான வருடாந்த சுயாதீன அறிக்கையில் அமெரிக்க தகவல் வெளியிட்டுள்ளது.


இந்த நிலையில் இன,மத அடிப்படையில் சிறுபான்மையினரை மதித்து நல்லிணக்க செயல்பாட்டின் ஓரங்கமாக மதச்சுதந்திரத்தை உள்ளடக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கையின் ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நீண்டகாலமாக தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்கு குறிப்பாக காவலில் வைக்கப்பட்டவர்களுக்கு உரிய நடைமுறையை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க திணைக்கள் இராஜதந்திரிகள் அரசாங்க அதிகாரிகளிடம் குறிப்பிட்டதாகவும் அவ்வறிக்கையில் கட்டிக் காட்டப்பட்டுள்ளது.

16.05.2023 முதல் சீனாவின் யுனான் மாகாண ஆளுனர் வாங்யுபோ இலங்கைக்கு ஐந்து நாள் அரசமுறை விஜயமாக வருகை தந்துள்ளார். அவர் கொழும்பு, கண்டி, பொலநறுவை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. இவரது விஜயத்தில் இரு நாட்டின் வெளியுறவு அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளவுள்ளதாகவும் அதற்கான முன்மொழிவுகளை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இலங்கைக்கும் யுனான் மாகாணத்திற்குமான உறவு வரலாற்று ரீதியான நட்புடையதென இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய இரு போட்டியிலுள்ள வல்லரசுகள் இலங்கைத்தீவில் களமாடும் .அரசியல் மேலாதிக்கம் செய்வதற்கான செய்முறையாகத் தெரிகிறது. இரு தரப்பும் தொடர்ச்சியாக தமது ஆதிக்கத்தை நிறுவ முயலுகின்ற போது இராஜதந்திர சொல்லாடல்களை அவ்வப்போது வெளிப்படுத்துவதில் கவனம் கொள்கின்றன. அதன் மீது நம்பிக்கை வைப்பதனை விட அதனை எதிர்கொள்ளதே

தமிழ் தரப்பு முயலுதல் அவசியமானது. தென் இலங்கையின் போக்கு அத்தகைய வல்லரககளை நிறுத்தி விட்டு வடக்கு கிழக்கு மீதான செயல்பாடுகளை தொடர்ச்சியாக மேற் கொள்கின்றன. ஆனால் தமிழ் தரப்பு மட்டுமே வல்லரசுகளின் இராஜதந்திர சொல்லாடலை நம்பி செயல் வடிவத்திற்காக காத்திருக்கின்றன. அத்தகைய வல்லரசுகளது சொல்லாடலின் உண்மைத் தன்மைகளை நோக்குவது அவசியமானது.

ஒன்று, அமெரிக்காவின் சிறுபான்மையினர் மீதான இராஜதந்திர சொல்லாடல்




இலங்கைத்தீவுக்கு மட்டுமுரியதல்ல. அது உலகளாவிய ரீதியான உபாயமானது. மத உரிமை பற்றிய நியாயப்பாட்டை தனது நாட்டிலே முழுமையாக பேண முடியாத அமெரிக்கா இலங்கைத்தீவிலுள்ள ஆட்சி யாளரிடம் அத்தகைய உரிமையைகோருவது வேடிக்கையானது. ஆனால் அது அமெரிக் களவின் இராஜதந்திர நகர்வாகும்.

வேண்டும் என்பதே அத்தகைய இராஜதந்திரமாகும்.

இரண்டு, யுனான் மாகாண ஆளுநரது விஜயம் பொருளாதார ரீதியானது. இலங்கைத்தீவை சீனா தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள பொருளாதார அணுகுமுறையை பலமானதாக வைத்துக் கொள்ள முனைகிறது. அதற்கான உடன் பாடுகளை மத்திய அரச மட்டத்தில் மட்டுமல்லாது மாகாண மட்டத்திலும் பேண முனைகிறது. கடந்த காலங்களில் யுனான் மாகாணத்துடன் பல உடன்பாடுகளை கண்டி அனுராதபுரம் போன்ற மாவட்டங்கள் மேற் கொண்டிருந்தது நினைவு கொள்ளத் தக்கது. இது சீனாவின் பிடிக்குள் இலங்கைத்தீவின் நகரங்கள் கிராமங்கள் என்ற வேறுபாடின்றி செயல்படுத்த முனைகிறதாவே தெரிகிறது. தென் இலங்கையில் அதிக உறவினைக் கொண்டுள்ள சீனா தற்போது கிழக்கு மாகாணத்தையும் அதிலும் திருகோணமலை மட்டக்களப்பை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. அத்தகைய பிரதேசங்களில் சீனாவின் பிரசன்னம் ஒப்பீட்டிப் படையில் குறைவானதாகவே உள்ளது. அதனை சரி செய்வதன் மூலம் வடக்கு நோக்கிய அதன் நடைமுறைகளை பலப்படுத்த முடியுமென சீன கருதுகிறது.

சீனாவின் பொருளாதார மறுசீரமைப்பும் உலகத்தை நோக்கிய நகர்வும் அப்படியானதே. அதாவது படிப்படியாக கைப் பற்றுவதென்பதே அதன் உபாயமாகும். ஏனைய வல்லரக நாடுகளைப் போலல் லாது படிப்படியாக நகர்ந்து இறுதியில் ,லக்கை அடைவதே சீனாவின் உபாயமாகும். அதனையே சீனா நகர்த்தி வருகிறது. தென் இலங்கை வேறுபாடின்றி சீனாவின் செல்வாக்குக்குள் அகப்பட்டுள்ளது. கிழக்குக்கு பின் வடக்கு என்ற நிலை ஏற்படும் போது இலங்கைத் தீவு சீனாவின் செல்வாக்கு பிரதேசமாக அமையும். தென் இலங்கை அமெரிக்காவை கையாளுகிறார்களே அன்றி உறவு கொள்வதாக கருதமுடியாது. அது சீனாவுடனே உறவு வைத்துள்ளது.

இலங்கை ஒரு மதவாத நாடு. மத நல்லிணக்கத்தை பேணாத நாடு. ஆனால் சீனா சோஸலிஸம் என்கிறது. பல சந்தர்ப்பங்களில் கம்யூனிஸம் என்றும் அழைத்துக் கொள்ள முனைகிறது. அத்தகைய நாடு இலங்கை, பர்மா மற்றும் தாய்லாந்து போன்ற மதவாத நாடுகளுடன் உறவு வைத்துக் கொள்கிறதென்பது சித்தாந்த ரீதியில் நியாயமற்றது. உண்மையிலேயே ஒடுக்கப் பட்ட தேசிய இனம் என்ற அடிப்படை

யில் சீனா ஈழத்தமிழர் உறவே பலமானதாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் நடைமுறை அனைத்தும் தலை கீழானதாகவே அமைந்துள்ளது. போலியாகவேனும் ஈழத்தமிழர்–சீன உறவு சாத்தியமற்றதென்பதை தென் இலங்கை மட்டுமன்றி பிராந்திய சர்தேச நலன் வளர்த்து வைத்துள்ளது. உலகம் போலிதனத்துக்குள்ளால் நகர்கிறது. சிந்தனையாளர் பேத்லர் குறிப்பிடுவது போல் உலகம் போலித்தனத்துக்குள்ளால் நகர்கிறது. சித்தாந்தங்களும் கொள்கைகளும் இல்லாத உலகத்திற்குள் மனித சமூகத்தின் இருப்பு கட்டமைக்கப் பட்டது என்கிறார் பேத்லர்.

இத்தகைய வல்லரசுகளது நிலையை கடந்து தென் இலங்கை சிறுபான்மை இனங்கள் மீது மத விரோத முறையை மேற்கொண்டு வருகிறது. அதனை கண்டு கொண்ட அமெரிக்கா அதற்குரிய நடவடிக்கையாக அறிக்கையிடலோடு பூர்த்தி செய்துவிட்டது. ஏறக் குறைய கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இராஜதந்திரிகளது வருகை ஜனாதிபதியையும் பிரதமரையும் எச்சரிக்கை செய்துள்ளதாக வைத்துக் கொண்டால் அதன் பின்னர் வடக்கு கிழக்கில் அரங்கேறும் மத விரோத செயல்களுக்கு என்ன பதில் அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

அதனை அமெரிக்கா மேற்கொள்ள வில்லை என்றால் அதன் இலங்கைத் தீவின் மீதான செல்வாக்கு பலவீனமடைந்து விடும். தொடர்ச்சியாக சிறுபான்மை இனங்கள் மீதான தனது கரிசனையை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால் தென் இலங்கையில் மாற்றம் நிகழும் போதும் தற்போதைய ஆட்சி சீனா சார்பு நிலையை அடைய முயலும் போதும் தலையீடு செய்ய முடியாத சூழல் ஏற்பட்டு விடும், இதனால் சிறுபான்மை இனங்கள் அமெரிக்காவுடன் உறவு வைத்துக் கொள்ளும் நிலையை பலப்படுத்த முடியும். அதனால் மத்தியிலுள்ள தென் இலங்கை ஆட்சியை பாதுகாக்க முடியுமாக அமையும், அதனை நோக்கி அமெரிக்கத் தூதரகம் செயல்படுகிறதாகவே தெரிகிறது.

அது மட்டுமன்றி சிறுபான்மை இனமாக ஈழத்தமிழர், முஸ்லிம் கள்,மலையகத் தமிழர் அமெரிக்காவால் அடையாளப் படுத்தப்படுகிறதா என்ற குழப்பம் நிலவுகிறது. ஈழத்தமிழர் ஒரு தேசிய இனமாக கருத முடியாத அமெரிக்காவால் ஈழத் தமிழரது உரிமை வென்றெடுக்க உதவும் என கருத முடியுமா என்பது கேள்விக்குரியதாகும். குறைந்த பட்சம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் நிலையைக் கூட அமெரிக்கா கொண்டிருக்கா என்பது கேள்விக்குரியதே.

ஈழத்தமிழர் ஒரு சிறுபான்மையினர் என என்னுமே கருதும் நிலை அமெரிக்காவிடம் உள்ளதாகவே அமெரிக்காவின் வருடாந்த அறிக்கை உணர்த்துகிறது. அப்படியாயின் அமெரிக்கா தனது நலன்களுக்குட்பட்டு இராஜதந்திர செய்முறையை வெளிப்படுத்துகிறது. அது ஈழத்தமிழருக்கானதோ இலங்கைத்தீவுக்கானதோ இல்லை. அது முழுமையாக அமெரிகச்காவுக்கானது. தொடர்ந்து இலங்கைத்தீவில் அமெரிக்காவின் பிரசன்னம் நிரந்தரமானதாக அமைய

அத்தகைய நடவடிக்கையை கட்டுப்படுத்த ஏன் அமெரிக்காவால் முடியவில்லை. அப்படியானால் ஏன் அமெரிக்க வருடாந்த அறிக்கையிடலை மேற்கொள்கிறது என்பது தவறான கேள்வியாகாது. அவை அனைத்தும் ஏமாற்று வேலையாக பார்க்கப்படுத்தல் தவறானதாக அமையாது.

அதாவது பிறுபான்மைகள் மீது அமெரிக்கா கொண்டுள்ள கரிசனை போலியானதாகவே தெரிகிறது. தனது நவனுக்குட்பட்ட ஆட்சியை பாதுகாப்பதே அமெரிக்காவின் நோக்கமாகவுள்ளது. சீனா வெளிப்படையாக சித்தாந்தத்தை கடந்து தென் இலங்கையுடன் கொண்டுள்ள நெருக்கம் முழுத் தீவையும் கைப்பற்றுவதாகவே உள்ளது. தென் இலங்கை தனது நலனை சரி வர நிறைவு செய்ய முனைகிறது.

அமெரிக்கா இந்தியா சீனா போன்ற வல்லரசுகளது சூழலை பயன்படுத்திக் கொண்டு வடக்கு கிழக்கு மத விரோத செயல் மட்டுமன்றி நில ஆக்கிரமிப்பையும் நிர்வாகம் மீதான தலையீட்டையும் எல்லையின்றி செயல்படுத்துகிறது. அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அறிக்கையை அரட்டை செய்யும் தென் இலங்கை வடக்கு கிழக்கை முழுமையாக ஆக்கிரமிப்பதென்ற நிகழ்ச்சி நிரலை பூரணப்படுத்துகிறது. அதற்காகவே இயங்குகிறது. எனவே ஈழத் தமிழர் அமெரிக்க சீன நகர்வு மட்டுமல்ல இந்தியா போன்ற பிற வல்லரசுகளது நகர்வுகளை இராஜதந்திர நகர்வாகக் கருதுவதுடன் அதற்கு சமதளத்தில் நகர்வது அஷியமானது. அனைத்து நாடுகளுக்கும் நலன் முதன்மையானது. அத்தகைய நலன்களை புரிதலுடன் தீர்வை நோக்கி நகர முடியுமெனவும் நம்பிக்கை கொள்வதே அபாயமானது. அதற்காக பதிலை ஈழத்தமிழர் இராஜதந்திர செய்முறையனால் கையாள்வதே பொருத்தமானது.

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:01 PM Page 18



# முருகன்,சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் முழுமையான விடுதலை எப்போது கிடைக்கும்?

முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி 30 ஆண்டுகளாக சிறையில் இருந்த 7 பேரும் கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். முதலில் பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து சிறையிலிருந்த நளினி, முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் நளினி, ரவிச்சந்திரனை தவிர முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். சிறையிலிந்து விடுதலையான முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய நால்வர் காவல் துறையினர் பாதுகாப்புடன் திருச்சி சிறப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

6 மாதங்களுக்கு மேலாகியும் இவர்கள் 4 பேரும் திருச்சியில் சிறப்பு முகாமில் ஏன் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனக் கேள்வி எழுப்புகின்றனர் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டாலும் இவர்கள் வெளிநாட்டினர் என்பதால் தற்போது வரை திருச்சி மத்திய சிறையில் உள்ள சிறப்பு மூகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியில் இருக்கும் இந்தச் சிறப்பு மூகாம் இலங்கை தமிழர்களுக்கான சிறப்பு முகாம் அல்ல. குற்றச்செயல்களில் கைது செய்யப்பட்டு, பிணையில் இருக்கும் வெளிநாட்டினரை தங்க வைக்க இந்தச் சிறப்பு மூகாம் பயன்படுத்தப்படுகிறது. இங்கு இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பிற நாட்டினரும் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

தற்போது முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் சொந்த நாட்டுக்கு செல்லவேண்டுமா அல்லது இந்தியாவிலே தங்கியிருக்க விருப்பமா என்பதைக் கேட்டு அவர்களைத் திருப்பியனுப்ப அரசு முடிவெடுக்கும் என விடுதலைக்குப் பிறகு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட போது திருச்சி மாவட்ட ஆட்சியர் தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நால்வரும் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பிபிசி தமிழிடம் பேசிய வழக்கறிஞரான புகழேந்தி, 31 ஆண்டுகள் சிறை தண்டனை முடிந்து வெளியே வந்த இந்த 4 பேரும் ஏன் இத்தனை நாட்களாக சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சாந்தன், முருகன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையிலிருந்தும், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் சென்னை புழல் சிறையிலிருந்தும் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் அங்கிருந்து திருச்சியிலுள்ள வெளிநாட்டினர் தங்க வைக்கப்படும் சிறப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் இன்னும் விடுதலை செய்யப்படாமல் சிறப்பு முகாமிலேயே தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.



திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இந்த நால்வரும் ராஜிவ் காந்தி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள் என்பதால் அவர்களை மீண்டும் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவது தொடர்பாக சில நடைமுறைகள் உள்ளன.

குறிப்பாக இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொந்த நாட்டுக்கு செல்ல விருப்பமிருந்தால் இலங்கை அரசுடன் பேசி அனுமதி பெறவேண்டும். இந்தியாவிலேயே தங்க விரும்பினால் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்குரிய நடைமுறை செய்யவேண்டும்.



இது மட்டுமின்றி வெளிநாட்டைச் சேர்ந்தவர்களைத் திருப்பியனுப்பும் விவகாரத்தில் உள்துறை அமைச்சகத்தின் அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் முருகன் உள்ளிட்ட 4 பேரும் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக சிறப்பு மூகாமில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

முருகனின் மனைவியான நளினி, சிறப்பு முகாமிலிருந்து தனது கணவர் விடுதலை செய்யப்பட்ட பிறகு அவரை அழைத்துக் கொண்டு லண்டனில் வசிக்கும் மகளைக் காணத் திட்டமிட்டுள்ள நிலையில் 6 மாதங்களுக்கு மேலாகியும் தனது கணவரை விடுதலை செய்யாமல் வைத்திருப்பது குறித்து கவலை தெரிவித்தார். இது தொடர்பாக பிபிசி தமிழிடம் பேசிய நளினி `30 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்து வெளியே வந்தாலும் என் கணவர் மற்றும் மகளுடன் சேர்ந்து வாழ முடியவில்லை. சிறப்பு முகாமில் உள்ள என் கணவரை அடிக்கடி சந்தித்துப் பேசி வருகிறேன். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் நாம் எப்போது மகளுடன் இணைந்து ஒரே குடும்பமாக வாழப் போகிறோம் என்ற கேள்வியை மட்டுமே என்னிடம் கேட்கிறார். அவரை விரைவாக விடுதலை செய்ய அரசு உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று கூறினார்.

பல ஆண்டுகளாக சிறையில் இருந்தவர்களை சிறப்பு முகாமிலிருந்து விடுதலை செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பளரான திருமுருகன் காந்தி தெரிவித்தார். 31 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்து வெளியே வந்த நபர்களை சாதாரண நபர்களைப் போலக் கருதி அரசு நடைமுறைகளை தாமதம் செய்யக் கூடாது. நீண்ட நாட்களாக தாமதம் ஏற்படுவதைப் பார்க்கும்போது பின்னணியில் அரசியல் அழுத்தம் ஏதுமுள்ளதா என்ற கேள்வி எனக்கு எழுகிறது,'' என்று அவர் தெரிவித்தார்.

ஏழு தமிழர் விடுதலை கூட்டியக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞரும், மனித உரிமை ஆர்வலருமான முத்துகுமார் பிபிசி தமிழிடம் பேசும்போது, முருகன்,

(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# கனடா - இலங்கை ராஜீய மோதல்கள் மோசமான பாதையை நோக்கிச் செல்கிறதா?

கனடா நாடாளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படுகொலை தினம் கடைப்பிடிப்பு (மே 18) முன்மொழிவு தொடர்பான அறிவிப்பை கனடா பிரதமர் ஜெஸ்டீன் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனதுகடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்துள்ளது. இது தற்போது அந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜீய அளவிலான மோதலாக உருப் பெற்றுள்ளது.

கனடா பிரதமர் தமிழர் இனப்படுகொலை தினமாக மே 18ஆம் தேதி கடைப் பிடிக்கப்படும் என்ற அறிவிப்பை மே 23ஆம் தேதி வெளியிட்ட பிறகு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கைக்கான கனடா தூதுவரை நேரில் அழைத்து, கனடா அரசின் அறிவிப்பை முழுமையாக நிராகரிப்பதாக கூறினார்.





இலங்கை எம்.பி உதய கம்மன்பில இந்த விஷயத்தில் கனடாவுக்கு எதிர்வினை யாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார். இலங்கையில் நடக்காத தமிழ் இனப்படுகொலைக்காக ஒரு தேதியை ஒதுக்குவதற்கு பதிலாக, கனடாவில் ஆதிவாசி தினம் கடைப் பிடிக்கப்படும் ஜூன் 21ஆம் தேதியை, கனடா ஆதிவாசி இனப்படுகொலை தினமாக பெயரிட வேண்டும் என்ற யோசனையை முன் வைப்பதாக பாராளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோ இது பற்றி தமது நாட்டு நாடாளுமன்றத்தில் பேசுகையில், 14 வருடங்களுக்கு முன்பு நிறைவு பெற்ற இலங்கையின் சிவில் யுத்தத்தின் கடைசி நாட்களில் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலை உள்ளிட்ட சம்பவங் களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்க ளின் உயிர்கள் காவு கொடுக்கப்பட்ட தாக தெரிவித்திருந்தார்.

இலங்கையில் 14 வருடங்களுக்கு முன் னர் முடிவடைந்த ஆயுத போராட்டத் தில் நடந்த உயிரிழப்புக்களை நாம் இன்று நினைவு கூர்கிறோம். முள்ளி வாய்க்காலில் படுகொலை உள்ளிட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்களை இழந்ததுடன், பலர் இன்ன மும் காணாமல் போயுள்ளனர். பலர் காய மடைந்துள்ளனர் அல்லது இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் பாதிக்கப் பட்டவர்கள், உயிரை பாதுகாத்துக் கொண்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுடன் இணைந்து இந்த நாளை நாம் நினைவு கூர்கி றோம்.'

பல ஆண்டுகளாக நாடு முழுவதுமுள்ள சமூகங்களில் நான் சந்தித்த பலர் உள்ளிட்ட, மோதல்களால் பாதிக்கப் பட்ட தமிழ் - கனேடியர்களின் கதை கள், மனித உரிமைகள், அமைதி மற் றும் ஜனநாயகம் ஆகியவற்றை சாதார ணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நினைவுட்டியது,' என்று ட்ரூடோ பேசினார்.

மேலும்,"2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பிரேரணையொ ன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம், எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்ததுடன், நாட்டின் மனித உரிமை, பொருளாதாரம் மற்றும் அரசி யல் சர்ச்சைக்கு தீர்வொன்றை பெற்று க்கொடுக்குமாறு இலங்கை அரசாங்க த்திடம் கோரினோம்.'

"எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்வதற்காக, இலங்கை க்குள் சமய சுதந்திரம், நம்பிக்கை, பன்மைத்துவ சுதந்திரம் ஆகியவற்றை கோருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையிலு ள்ள ஏனைய தீர்மானங்களை நிறை வேற்றுவதில் கனடா உலகளாவிய தலைமைத்துவத்தை வழங்குகின்றது. மேலும், 2023ம் ஆண்டு ஜனவரி மாதத் தில் மனித உரிமை மீறலுக்கு பதிலளி க்கும் வகையில், எமது அரசாங்கம், இலங்கை அரச அதிகாரிகள் நால்வரு க்கு எதிராக தடைகளை விதித்தது,' என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ் - கனேடியகள் நம் நாட்டிற்காக செய்த மற்றும் தொடர்ந்தும் செய்து வரும் பங்களிப்புக்களை அங்கீகரிக்கும் வகையில் அனைத்து கனேடியர்களுக் கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இலங்கையில் இடம் பெற்ற ஆயுதப் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் அறிந்துக்கொள்ளுமாறும், துன்பப்படும் அல்லது அன்புக்குரியவர் களை இழந்தவர்களுடன் இணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் நான் அனைவரையும் ஊக்குவிக்கின் றேன்,' என கனடா பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையில் இடம் பெற்ற சிவில் போரின் போது இனப்படுகொலை இடம் பெற்றதாக கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோவினால் வெளியிடப்பட்ட கருத்தானது, அரசியல் சார்பு கொண்ட சர்ச்சைக்குரிய கருத்து என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தானது கனடாவின் உள்ளக அரசியல் தேவையை கருத்திற் கொண்டு வெளியிடப்பட்ட கருத்து என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பி னால் மூன்று தசாப்த காலமாக முன் னெடுக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குத லுக்கு மத்தியில், இடம் பெற்றதாக கூறப்படும் இனப்படுகொலை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள இவ்வாறான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கை நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை, சமாதா னம், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்றவற்றிற்காக இலங்கை அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில், கனடா பிரதமரினால் முன்வைக்கப்பட்ட இந்த கருத்தானது, பொய்யானது மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு காரணத்தினால், இலங்கை யர்கள் துருவப்படுத்தப்படலாம் என இலங்கைக்கான கனடா தூதுவரிடம், வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள் ளார்.

இந்த "இனப்படுகொலை' இலங்கை யினால் நடத்தப்பட்டது என ஒருதலை பட்சமாக முன்வைக்கப்படும் போலி குற்றச்சாட்டுக்கள், புலம்பெயர்ந்து வாழும் பிரிவினைவாத சிறுபான்மை யினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவா னது என வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, கனடா பிரதமரினால் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில், இலங்கை வெளி விவகார அமைச்சர் ட்விட்டர் பதிவொன்றின் ஊடாக தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

மேற்குலக நாடுகளிலுள்ள பிரிவினை வாதிகள், தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள், நிதி சேகரிப்பாளர்களு டன் விளையாடும் தலைவர்கள், அரசியல் லாபத்திற்காக கருத்துக்களை (10ம் பக்கம் பார்க்க)


House for sale
In Beavarton town



35 minutes from Ajax
4 bedrooms 2 baths - $ 699,000
3 years rental grantee $ 2,800
Basment can rented fr $ 1,400
Need $ 35,000 to finish (3bedroom)

Call 416-518-5959

# தமிழில் அதிக படங்கள் நடித்தாலும் விருதுகளைக் குவிக்காத நடிகர் சரத்பாபு மறைவு



தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட திரையுலகில் கடந்த 50 வருடங்களாக நடித்து வந்த மூத்த நடிகர் சரத் பாபு ஹைதராபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 71. தமிழ், தெலுங்கு, கன்னட திரைப்பட உலகில் அவர் 200க்கும் மேற்பட்ட படங்களை நடித்துள்ளார்.

ஹைதராபாதில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த பல வாரங்களாக சரத் பாபு சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல் முழுவதும் செப்சிஸ் மற்றும் பல உறுப்புகள் செயலிழந்ததால் அவரது உயிர் பிரிந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

செப்சிஸ் என்பது நோயாளியின் நோய் எதிர்ப்பு மண்டலத்தால் உடல் சேதமடையும் போது பாக்டீரியா அல்லது வைரஸ் தொற்றுக்கு எதிர்வினையாற்றும் ஒரு அபாயகர மருத்துவ நிலை ஆகும்.

திரையுலகினர் மற்றும் அரசியல்வாதிகள் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். சரத்பாபுவின் வீடு சென்னை தியாகராயா நகரில் உள்ளது. அவரது குடும்பத்தினர் கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக ஹைராதாபாதில் தங்கி சரத் பாபுவின் உடல்நிலையை கவனித்து வந்ததால், அவரது சென்னை வீடு பூட்டப்பட்டிருக்கிறது.

சரத் பாபு செப்சிஸ் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தகவல் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், அடுத்த சில தினங்களில் அவர் கவலைக்கிடமாக இருப்பதாகவும் பிறகு அவர் இறந்து விட்டதாகவும் வதந்தி பரவியது. இந்த வதந்தியை உண்மை என நம்பி தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் பல ஊடகங்கள் சரத்பாபு இறந்து விட்டார் என்ற தகவலை வெளியிட்டன.

திரைப் பிரபலங்கள் பலரும் சரத்பாபுவுக்கு இரங்கல் தெரிவித்து விட்ட நிலையில் அவரது குடும்பத்தினர் தலையிட்டு 'சமூக ஊடகங்களிலும் சில ஊடகங்களிலும் சரத்பாபுவின் உடல் நிலை பற்றி வெளிவரும் தகவல்களில் உண்மை இல்லை. அவரது உடல் நிலை தேறி வருகிறது.' என்று தெரிவித்தனர். இந்நிலையில் தொடர்ந்து மருத்துவ மனையில் சரத்பாபு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மே 3ஆம் தேதி ஹைதராபாத்தில் உள்ள ஐஏஜி மருத்துவ மனையில் சரத்பாபு இறந்து விட்டதாக தகவல் வெளியானது. இந்த தகவலை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தா விட்டாலும், சரத் பாபு குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ள பல நடிகர்களும் நேரடியாக நிலைமையை அறிந்து ஊடகங்களிடம் உறுதிப்படுத்தினர்.

இந்திய தென் மாநில மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய படங்களில் சரத்பாபு நடித்திருந்தாலும் அவர் அதிகமாக நடித்த படங்கள் தமிழ் மொழியில் தான். தமிழ் திரையுலகில் முன்னணி நடிகர் களான சிவாஜி, ரஜினிகாந்த், கமல் ஆகியோருடன் இணை நாயகனாகவும் (செகண்ட் ஹீரோ) சமீபத்தில் தயாரிக்கப்பட்டு வரும் வசந்தமுல்லை தமிழ் திரைப்படம் வரை சுமார் இருநூறு படங்களில் அவர் நடித்திருக்கிறார்.

1973ஆம் ஆண்டில் வெளிவந்த தெலுங்கு படமான ராமராஜ்ஜியம் தான் சரத்பாபுவுக்கு திரையுலகில் அறிமுகத்தைக் கொடுத்தது. அதன் பிறகு அவருக்கு பட வாய்ப்புகள் அமையா விட்டாலும் அவரது தந்தை நடத்தி வந்த ஹோட்டல் தொழிலை கவனித்து வந்தார் சரத். ஆனால், அவரது திரையுலக கனவு அவரை விட்டுச் செல்லாததால், 1976இல் ராஜா என்ற படத்தில் வழக்கறிஞர் ராமு கதாபாத்திரத்தில் நடித்தார். இந்த திரைப்படத்துக்கு பிறகு சரத்பாபுவுக்கு அவரது திரையுலகில் ஏறுமுகம் காணப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு ஆண்டில் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட படங்களில் அவர் நடிக்கத் தொடங்கினார்.

அந்த வகையில் சரத்பாபுவுக்கு தமிழில் அறிமுகம் கொடுத்தவர் மறைந்த இயக்குநர் கே. பாலசந்தர். 1977இல் கே.பி இயக்கத்தில் தயாரிக்கப்பட்ட 'பட்டினப் பிரவேசம்' என்ற திரைப்பட சரத்பாபுவின் நடிப்புத்திறமைக்கு சான்று கூறியது. இதைத் தொடர்ந்து நிழல் நிஜமாகிறது என்ற தமது அடுத்த திரைப்படத்தில் கமல்ஹாசனுக்கு இணையான இரண்டாம் நாயகன் கதாபாத்திரத்தில் நடித்து (22ம் பக்கம் பார்க்க)

RG Education Centers
Established in 1991
ஆர். ஜி. கல்வி நிலையம்

PAR EXCELLENCE

பாலர் வகுப்பு முதல் உயர்நிலை வகுப்புகள் வரை
அத்தியாவசிய கல்வித் தேவைகளுக்கு

3852 FINCH AVE EAST, SUITE 401
(One Block West of Kennedy)
Scarborough

தகவல் பெற உங்கள் பெயர், தொடர்பு இலக்கம் பதிவு செய்ய
416-609-9508 அல்லது 416-396-3224
email: info@rgeducation.com
மேலதிக விபரங்கட்கு www.rgeducation.com

# அமைதியாக இருக்கிறதா ஆசியா?

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டு, 50ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, கடந்த வார இறுதியில் நடந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியிருந்தார். அவரது உரையில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஆசிய பூகோள அரசியலுக்கும், பசுபிக் பிராந்திய அரசியலுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன என்பது முதலாவது, விடயம். உலக வல்லரசுகளாக மாற வேண்டும் என்ற நோக்கத்துடன், சில குழுக்கள் பசுபிக் சமுத்திர நாடுகளுக்கிடையிலான ஒற்றுமையை குலைத்து, அவற்றுக்கிடையில் மோதலை ஏற்படுத்தியுள்ளன என்பது இரண்டாவது விடயம். ஆசிய பூகோள அரசியலையும், பசுபிக் பிராந்திய அரசியலையும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேறுபடுத்தியிருக்கிறார்.

அவர் ஆசிய பூகோள அரசியல் என்று குறிப்பிடுவது இந்தியப் பெருங்கடல் சார்ந்த பூகோள அரசியலையா என்ற தெளிவின்மை காணப்படுகிறது. அவர் ஒரு பக்கம் ஆசியவை கண்டமாக பார்க்கிறார். பசுபிக்கை பெருங்கடல் பிராந்தியமாக குறிப்பிடுகிறார். அமெரிக்கா இந்தியப் பெருங்கடல், பசுபிக் பெருங்கடல் பிராந்தியங்களுக்கு தனித் தனியான கொள்கைகளையும், படைப் பிரிவுகளையும்வைத்திருந்த நிலையை மாற்றி இப்போது, இந்தோ – பசுபிக் மூலோ பாயத்தையும், இந்தோ பசுபிக் கட்டளைப் பீடத்தையும் உருவாக்கியிருக்கிறது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசியா கண்டத்தையும், பசுபிக் பிராந்தியத்தையும் வேறுபடுத்தியிருப்பது. அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் மூலோபாயத்துடன் முரண்படுகிறது. ஆசியாவின் பூகோள அரசியலுக்கும், பசுபிக்கின் பிராந்திய அரசியலுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதாக அவர் கூற முனைந்திருப்பது, அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் மூலோபாயத்தைக் கேள்விக்குட்படுத்துகிறது. பசுபிக் பிராந்தியத்தின் ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருக்கிறார்.

பசுபிக் பிராந்தியம், அமெரிக்கா, கனடா, ஜப்பான், இந்தோனேஷியா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளை உள்ளடக்கியது. அதாவது கிழக்கே இந்தோனேசியாவில் தொடங்கி, மேற்கே வட மற்றும் தென் அமெரிக்க கண்டத்துக்கு மேற்கே உள்ள பகுதிகள் வரை 32 நாடுகள், பசுபிக் பிராந்தியத்துக்குள் இருக்கின்றன.

அதேவேளை, ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா, சீனா, இலங்கை உள்ளிட்ட 24 நாடுகள் உள்ளன. ஆசிய கண்டத்துக்குள்ளேயும், பசுபிக் பிராந்தியத்துக்குள்ளேயும் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில், ஆசிய கண்டத்தின் பூகோள அரசியலை பசுபிக் பிராந்திய அரசியலில் இருந்து வேறுபடுத்திக் கொள்ளும் நோக்கம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏன் வந்திருக்கிறது?

பசுபிக் பிராந்தியத்தில் அண்மைக் காலமாக சீனாவுக்கும் தாய்வானுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினை, சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் காணப்படும் பிரச்சினை, என்று பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. உலக வல்லரசாக மாற வேண்டும் என்ற நோக்கத்துடன் சில குழுக்கள் தான், பசுபிக் பிராந்திய நாடுகளைப் பிளவுபடுத்தியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார் ரணில் விக்கிரம சிங்க. ஆனால் அவர், சில குழுக்கள் என்று குறிப்பிட்டது பலம் மிக்க நாடுகளைத் தான். உலக வல்லரசாக வேண்டும் என்பதற்காக இந்த குழுக்கள் பிரச்சினையை உருவாக்கி விட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தாலும், அந்த குழுக்கள் எவை என்பதை வெளிப்படுத்தவில்லை.

இந்த இடத்தில் அவர், யாரையோ குற்றம் சாட்டுவதாகத் தெரிந்தாலும், அது யாரை என்று ஊகிப்பது தான் கடினம். அமெரிக்கா ஏற்கனவே வல்லரசு தான். சீனா மட்டும் தான் வல்லரசாக மாறத் துடிக்கும் நாடு. பக்கத்தில்



சீனத் தூதுவரை வைத்துக் கொண்டு சீனாவினால் கட்டித் தரப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் பொன் விழாவில் அவர் சீனாவையே உரசிப் பார்க்க முனைந்திருக்க மாட்டார்.

அதேவேளை, ஜப்பானும் வல்லரசு நிலைக்குப் போட்டியிட்ட நாடு தான். இரண்டாம் உலகப் போரில், சீனாவையும், அமெரிக்காவையும் எதிர்த்துப் போரிட்ட ஜப்பான், அணுகுண்டுகள் வீசப்பட்ட பின்னரே அடங்கியது.

இப்போது ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையில் பிரச்சினைகள் இருந்தாலும், தாய்வானுக்கும் சீனாவுக்கும் முரண்பாடுகள் நீடித்தாலும், அவற்றுக்கும் வல்லரசு கனவுக்கும் இடையில் வெகு தொலைவு. அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் கடந்த காலங்களில் பல்வேறு உலக விவகாரங்களில் தலையிட்டிருக்கின்றன. நாடுகளுக்கிடையிலான மோதல்களை தூண்டி விட்டிருக்கின்றன. இன்று உக்ரேனின் மீது தொடுக்கப்பட்டுள்ள ரஷ்ய ஆக்கிரமிப்பு போரும் அவ்வாறான ஒன்று தான். தென்அமெரிக்க நாடுகள், ஈராக், ஆப்கானிஸ்தான், வியட்நாம் என்று அமெரிக்கா பல நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தான், உக்ரேன் உள்ளிட்ட பல நாடுகளில் ரஷ்யா தலையீடு செய்திருக்கிறது. இவை பிளவுகளை ஏற்படுத்துவதில் கணிசமான பங்கை வகித்திருக்கின்றன. ஆனாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை விபரமாகப் பேச முனையவில்லை.

அவ்வாறு பேசுவது அவரை சர்ச்சைக்குள் இழுத்து விட்டு விடும். எனினும், அவர் ஆசிய பிராந்திய அரசியலுக்கும், பசுபிக் பிராந்திய அரசியலுக்கும் இடையில் வேறு பாட்டை வெளிப்படுத்துவதற்கு பஞ்சீலக் கொள்கையை கையில் எடுத்திருக்கிறார்.

புத்தரின் பஞ்ச சீல போதனைகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட பஞ்சசீலக் கொள்கைக்கும் வேறுபாடு உள்ளது.

இது 1954ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கும், சீன தலைவர் மாவோ சேதுங்கிற்கும் இடையில், செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை அடிப்படையாக கொண்டது.

1. ஒரு நாட்டின் தனித்துவ கௌரவத்தையும் அரசாங்க அதிகாரத்தையும் மற்ற நாடுகள் மதிக்க வேண்டும். இரண்டு நாடுகளின் கொள்கைகள் வேறுபட்டதாக இருந்தாலும், சமாதானமாக வாழ வேண்டும்.

2. எந்த நாடும் பிற நாட்டை ஆக்கிரமிப்பதற்காக தாக்கக் கூடாது.

3. ஒரு நாட்டில் உள்நாட்டு விவகாரங்களில்பிறநாடுகள் தலையிடக் கூடாது.

4. ஒவ்வொரு நாடும் பிறநாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கி மதிப்பு கொடுத்தல் வேண்டும்.

5.ஒவ்வொரு நாடும் பிறநாடுகளில் ஒற்றுமை இறையாண்மையையும் மதிக்க வேண்டும்.


இது தான் பஞ்சசீலக் கொள்கை உடன்பாடு. இதனை பின்னர் பல நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்தன. இதன் அடிப்படையில் ஆசியா தனித்துவமாக இருப்பதாகவும், அந்த நிலை தொடர வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் வெளியிட்டிருக்கிறார்.

ஆசியாவின் ஒற்றுமையை நாம் தொடர்ந்து உறுதி செய்ய வேண்டும். உலக வல்லரசு போட்டியில் இந்து சமுத்திர நாடுகளிடையே மட்டும் ஒற்றுமையை குழப்ப முடியவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உலக வல்லரசுகளாக மாற வேண்டும் என்ற இலட்சியத்துடன் சில குழுக்கள் பசுபிக் சமுத்திர நாடுகளிடையே ஒற்றுமையைப் குலைத்து அவற்றுக்கிடையில் மோதல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. அந்த நிலைமை இந்து சமுத்திரத்துக்குள் ஏற்படுவதை தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஆசியாவின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு இலங்கை எந்த வகையிலும் துணை போகாது'' என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆசியாவின் ஒற்றுமை பற்றிப் பேசும் அவர் திடீரென இந்து சமுத்திர நாடுகளிடையே ஒற்றுமையை குலைக்க

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



முடியவில்லை என்றும் பேசியிருக்கிறார். எவ்வாறாயினும், பசுபிக் பிராந்திய நாடுகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆசியப் பிராந்தியத்தின், இந்தியப் பெருங்கடல் பிராந்திய நாடுகளில் காணப்படும் முரண்பாடுகளை குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான் இடையிலும், இந்தியா,சீனா இடையிலும் காணப்படும் முரண்பாடுகள் எந்த நேரத்திலும் வெடிக்கக் கூடிய பூகம்பத்துக்கு இணையானது தான். பஞ்சசீலக் கொள்கை பற்றி ரணில் விக்கிரமசிங்க பேசியிருந்தாலும், அந்தக் கொள்கையை சீனாவும் இந்தியாவும் எந்தளவுக்கு கடைப்பிடிக்கின்றன என்ற கேள்வி இருக்கிறது.


ஏனென்றால், அந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்ட 8 ஆண்டுகளில், இந்தியாவும் சீனாவும், 1962,ல் பெரும் போரில் (22ம் பக்கம் பார்க்க)



Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:02 PM Page 22




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியதடை அகலும். இயந்திரங்கள் தீ ஆகிய வற்றில் கவனம் தேவை.



ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது ஆலோசித்து செய்வது நல்லது.தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார நிலை உயரும். பணி உயர்வு சம்பந்தமான தேர்வுகளில் தேர்ச்சி பெறுவீர்கள்.




மிதுனராசி அன்பர்களே! பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை அதிகரிக்கும்.




கடகராசி அன்பர்களே! செல்வ சேர்க்கை உண்டாகும். சுணங்கி கிடந்த காரியங்களில் வேகம் உண்டாகும். ஆன்மிக பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கும். வெளியூர் செல்ல நேரலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும்.



சிம்மராசி அன்பர்களே! மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடைஆபரணம் வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு இடமாற்றம் கிடைக்கும். தந்தை வழியில் கருத்து பலன் தரும்.



கன்னிராசி அன்பர்களே! அறிவுத்திறன் அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. மனதை கட்டுப்படுத்தி கொள்வது நல்லது. சின்ன விஷயங்களில் மன நிறைவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர் தொடர்பாக பயணங்கள் செல்ல நேரலாம். நிதானத்தை கடை பிடிப்பது நல்லது.




துலாம் ராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத்துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சரக்குகளை கையாளும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.




விருச்சிகராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச்செலவுகள் இருக்கும். பணவரத்து திருப்தி தரும். தொழில், வியாபாரம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள்.







தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெற்று, புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலைபளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அலுவலகத்தில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்.



மகரராசி அன்பர்களே! சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். வாகனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆக்கபூ ர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். தொழில் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடலாம். பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர்.



கும்பராசி அன்பர்களே! தேவையற்ற பிரச்னைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். பொருளாதார உயர்வு உண்டாகும். உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். மனநிம்மதி உண்டாகும்.



மீனராசி அன்பர்களே! காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். தொழில் வியாபாரத்தில் வேகம்அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். பொறுப்புக்களை அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும்!

(6ம் பக்கத் தொடர்ச்சி) தீர்த்துக்கொள்ள முடியாது. தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதே போன்று சிங்கள மக்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. வடக்கு மக்களின் பிச்சினையை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்வுகளை பெற்றுக்கொள்ள தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

தொடர்ந்து இனவாதம் பேசுவதால் எமக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. சிங்களவர்களும் வடக்கில் உள்ளவர்களும் இனவாதத்தை அணைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இனவாதத்தினால் எதனையும் சாதிக்க முடியாது என்பதை தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு நம்புகிறது. அதேபோன்று தெற்கில் இருப்பவர்களும் உணர்ந்திருக்கின்றனர். எனவே வடக்கு மக்களுக்கு குறைந்த பட்சமேனும் நன்மை செய்திருக்கும் ரணில் விக்ரமசிங்கவாகும். அவரின் தலைமைத்துவத்தில் தமிழ் மக்களின் பிச்சினையை முடியுமாளவு தீர்த்துக்கொள்ள தமிழ் கட்சிகள் முயற்சித்துக் கொள்ள வேண்டும்.

## தமிழில் அதிக படங்கள் நடித்தாலும்...

20ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் ரசிகர்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்தார் சரத். முன்னதாக, சரத்பாபுவை ஹைதராபாதில் ஒரு நிகழ்ச்சியில் பார்த்த கே.பாலசந்தர், அங்கேயே அவரை வைத்து ஃபோட்டோ ஷூட் நடத்தி தமது புதிய படத்துக்கு தேர்வு செய்தார். திரை வாழ்வுக்கு வந்த அடுத்த ஆண்டிலேயே சரத்பாபுவுக்கு அடுத்தடுத்த வாய்ப்புகள் குவிந்தன.

அதன் விளைவாக 1978ஆம் ஆண்டில் மட்டும் அவர் ஒரு தெலுங்கு படத்தி லும் ஏழு தமிழ் படங்களிலும் நடித்தார். அதில் குறிப்பிடத்தக்க படங்கள் நிழல் நிஜமாகிறது, உயிருள்ளவரை, முள்ளும் மலரும். இதில் முள்ளும் மலரும் படத்தை இயக்கிய மகேந்திரன் அந்த படத்தை 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி வெளியிடச் செய்தார். இத்தனைக்கும் இதுதான் இயக்குநர் மகேந்திரனின் முதல் படமும் கூட. அதிலும் உமாசந்திரனின் நாவலை படமாக்கிய முன்முயற்சியை அவர் திரையுலகில் தொடங்கி வைத்த தருணம் அது.

திரையுலகில் இந்த படம், அந்தக்காலத்து பாக்ஸ் ஆஃபிஸ் ஹிட் படமாக கருதப்பட்டது. நடிகர் ரஜினிகாந்துக்கு சிறந்த நடிகருக்கான மாநில அரசு விருதையும் சிறந்த படத்துக்கான விருதையும் முள்ளும் மலரும் பெற்றுக் கொடுத்தது. நடிகர் ரஜினியின் வாழ்விலும் இந்த படம் திருப்புமுனையாக அமைந்தது.

இந்த படத்தில் சரத்பாபு பாடுவது போல அமைந்திருக்கும் 'செந்தாழம் பூவில் வந்தாடும் தென்றல் உன் மீது மோதுதம்மா' என்ற பாடல் தான் சரத் பாபுவை தமிழ் ரசிகர்கள் நெஞ்சங்களில் இன்றும் அவரை நீங்காத நாயகராக வைத்திருக்கிறது. இளையராஜாவின் இசை, இயல்பான காட்சி அமைப்பு, கதாபாத்திரத்துடன் ஒன்றிய சரத்பாபுவின் நடிப்பு போன்றவை இந்த படத்தின் வெற்றிக்கு வலு சேர்த்தன. ஆரம்பத்தில் இரு கதாநாயகர்கள் உள்ள படங்களில் மட்டுமே நடிக் ஒப்பந்தம் ஆன சரத்பாபு, அடுத்தடுத்த படங்களில் தனி நாயகராகவும் நடிக்கத் தொடங்கினார்.

சரத்பாபுவின் திரை பயணத்தில் அவருக்கு 2017ஆம் ஆண்டில் சிறந்த குணச் சித்திர நடிகருக்கான தமிழ்நாடு அரசின் திரைப்பட விருது ஒரு முறை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, தெலுங்கு திரையுலகில் சிறந்த துணை நடிகரு க்கான விருது 1987, 1988, 1989ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. நன்றி:- பிபிசி

## அமைதியாக இருக்கிறதா ஆசியா?

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஈடுபட்டன. அந்தப் போரில் இந்தியத் தரப்புக்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டதுடன் கணிசமான நிலப்பரப்பை இழக்கவும் நேரிட்டது. இந்தியாவும் பாகிஸ்தானும் இன்றைக்கும் எல்லையில் மோதிக் கொண்டிருக்கின்றன. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினைகள் தீரவில்லை. இலங்கையில் கூட, பிற நாடுகளின் தலையீடுகள் இருப்பதால் தான், குழப்பங்கள் மிகுதியாக உள்ளன. போர் இல்லை என்பதை வைத்துக் கொண்டு இந்தியப் பெருங்கடல் பிராந்தியம், ஆசியப் பிராந்தியம் என்பன அமைதியாக, ஒற்றுமையாக இருக்கின்றன என்று அர்த்தமில்லை.

## முருகன்,சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட்...

(18ம் பக்த் தொடர்ச்சி) சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோரை சிறப்பு முகாமில் நீண்ட நாள் வைத்திருப்பது அவர்களுக்கு அளிக்கப்பட்ட விடுதலையின் பயனை கேள்விக்குள்ளாக்குவதாகத் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே மிக நீண்ட நாட்களாக சிறையிலிருந்த கைதிகளில் ராஜிவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட இந்த 7 பேரும் அடங்குவர். பெரிய அரசியல் சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு இப்போது தான் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் விடுதலைக்குப் பிறகு குடும்பத்துடன் கழிக்க வேண்டிய நாட்களை என்ன வென்று தெரியாத ஏதோவொரு காரணத்திற்காக மீண்டும் சிறப்பு முகாமில் கழிக்கும் வகையில் காவல்துறை கண்காணிப்பில் தங்க வைக்கப்பட்டிருப்பது இந்த நால்வருக்கும் வழங்கப்பட்ட விடுதலைக்கு முரணானது என்று அவர் தெரிவித்தார். நன்றி பிபிசி தமிழ்

## மதில் மேல் இருக்கும் ஆமைகள்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) கட்சிகளும் ஏதோ ஒரு விகிதளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன தமிழ் மக்கள் வடக்கு கிழக்காய்கட்சியாய் ˙ பொதுக் கட்டமைப்பாய் சாதியாய் சமயமாய் சிதறிக் கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது. தமிழ்மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பது தான் கடந்த 14 ஆண்டு கால அனுபவம்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

Eelanadu 26 May 2023.qxp_Layout 1 2023-05-25 5:02 PM Page 24



















